பக்கங்கள் 6

விலை சதம் 5

உங்கள் தேவைக்கான

சாப்புச் சாமான்கள், புட்டி மருந்துகள், பால் உணவுகள், டின் ஆகாரவகைகள், இங்கிலிஷ் பிஸ்கெட்டுகள் ஆகியவை எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் நிதானமான விலையில் கிடைக்கும்.

கே. எம்.
அரிசிமியாப்பிள்ளை & சன்ஸ்
347, மெயின் ஸ்டிரீட்,
கொழும்பு.
டெலிபோன்: 4586

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி	சதம்	5
3 மாதச் சந்தா	ரூ.	6-00
6 மாதச் சந்தா	„	12-00
1 வருடச் சந்தா	„	24-00

மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, தட்டாத் தெரு, கொழும்பு.

Phone: 3411

நாமார்க்கும் குடியல்லேம்

புத்தகம் 1 | கொழும்பு சர்வஜித்து ஆம் புரட்டாசி மீ 19உ ஞாயிற்றுக்கிழமை — Colombo, October, 5, 1947 — ஹிஜிரி 1366 துல்கஃதா பிறை 19 | இதழ் 124

வட்டத்தைச் சதுரமாக்க முடியுமா?

பாலஸதீன் பிரச்னைபற்றி செகோஸ்லாவிய பிரதிநிதி

நியூயார்க், அக். 3

இன்று ஐக்கிய தேச பாலஸதீன் கமிட்டியில் விவாதம் ஆரம்பமானபோது செகோஸ்லவகியா பிரதிநிதி விளக்கி பின்வருமாறு தெரிவித்தார்:- வட்டத்தைச் சதுரமாக்குவது எவ்வளவு முடியாத காரியமோ அவ்வளவு முடியாத காரியமாகும் பாலஸதீனத்தில் அராபியர்களையும் யூதர்களையும் ஒற்றுமைப்படுத்துவது. அது சம்பந்தமாக ஒரு திட்டம் வகுக்கப்பட்டால் அதை யார் அமுல் நடத்தவது என்ற கேள்விக்கு பதிலைக் கண்டுபிடிப்பது தான் இப்பொழுது முக்கியமான பிரச்னையாக இருக்கிறது.

பொது வேலை நிறுத்தம்

கெய்ரோ, அக். 3

பாலஸதீன் அராபிய உயர் கமிட்டிகட்டளையின் படி பாலஸதீன் பிரிவினைக் கொள்கையை ஆட்சேபித்து அராபிய நாடுகளில் பொது வேலை நிறுத்தம் நடைபெற்றது. ஈராக்கில் பஸரா துறைமுகப் பட்டினத்தில் அமைதியாக வேலை நிறுத்தம் நடைபெற்றது.

காலரா நோயை முன்னிட்டு எகிப்தில் பொது வேலை நிறுத்தம் நடைபெறாது தடுத்து விட்டார்கள். கெய்ரோவிலும் அலெக்சாண்டிரியாவிலும் இளைஞர்கள் ஊர்வலம் நடத்த முயன்றபோது தடுத்து விட்டார்கள். அலெக்சாண்டிரியாவில் சில இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஹைபா துறைமுகத்திற்கு வந்த யூதக்கப்பலிலிருந்து இறங்கிய யூதர்கள் மீண்டும் கப்பலிலேற்றப்பட்டு சைப்ரஸ் தீவுக்குக் கொண்டு போகப்பட்டார்கள். மற்றும் 5 கப்பல்களில் யூதர்கள் பாலஸதீனம் வருவதாகச் சொல்லப்படுகிறது.

(ராய்ட்டர்)

பூண்டுலோயா கடைத்தெருவில் சச்சரவு

40 தோட்டத் தொழிலாளருக்குக் காயம்

கண்டி, அக். 3

பாராளுமன்றத் தேர்தலில் கொட்டகலை தொகுதியில் அபேட்சகராக நின்று தோல்வியுற்ற திரு. எட்வர்ட்ஸை சேர்ந்தவர்களுக்கும் இலங்கை இந்தியன் காங்கிரசைச் சேர்ந்த இந்திய தோட்டத் தொழிலாளருக்குமிடையே பூண்டுலோயா கடைவீதியில் ஏற்பட்ட சச்சரவில் 40 தோட்டத் தொழிலாளர்கள் காயமடைந்ததாகச் சொல்லப்படுகிறது.

கூப்பன் அரிசி உயர்த்தப்படுமா?

கொழும்பு, அக் 5

இலங்கைக்குத் தற்போது பர்மாவில் இருந்து 5000 டன் அரிசி மாதாமாதம் வருகிறது. அதனை புதிய வருஷத்தோடு மாதம் 20,000 டன்னாக உயர்த்துவதற்கு முயற்சி செய்யப்படுவதாகவும், அது சரிவரும் பட்சத்தில் கூப்பன் அரிசியின் அளவைக் கூட்டி விலையையும் குறைக்க முயற்சி செய்யப்படும் என்றும் தெரிகிறது. இதில் புதிய உணவு மந்திரி ஜரூராக ஈடுபட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

ஐவுளி வர்த்தகர்களுக்கு புதிய மந்திரியின் சலுகை

உடு பிடவைகளின் விலையை ஏற்றிவிட்டார்

கட்டுப்பாடு அதிகாரி வெட்டிய விலை தட்டிநொறுக்கி சரிக்கட்டப்பட்டது

மூன்று மாதத் தகராறுமுடிவு; முடங்கிய துணிகள் வெளிவருகின்றன

கொழும்பு, அக். 5

இலங்கையின் புதிய வர்த்தக மந்திரி திரு. சி. சுந்தரலிங்கம், சென்ற மூன்று மாதங்களாக புடவைக் கட்டுப்பாட்டதிகாரிக்கும் புடவை வியாபாரிகளுக்குமிடையில் புடவை விற்பனவு இலாப விகிதக் குறைப்பு சம்பந்தமாக இருந்த விவகாரத்தை தீர்த்து வைத்துள்ளார்.

திரு சி. சுந்தரலிங்கம், புடவைக் கட்டுப்பாட்டதிகாரி திரு. எம். எப். டி. எஸ் ஜயரத்ன அவர்களுக்கு 50-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தைத் திருத்தி அமைக்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி சட்டம் லாபவிகிதத்தை மொத்தவியாபாரத்திற்கு 12 வீதத்தில் இருந்து 5 வீதமாகவும், சில்லறை வியாபாரதிற்கு 18 வீதத்தில் இருந்து 10 வீதமாகவும் குறைத்துவிட்டதன் காரணமாக வியாபாரிகள் அதிக அதிருப்தி அடைந்து புடவைக் கட்டுப்பாட்டதிகாரிக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

மந்திரியின் புதிய உத்தரவுப் பிரகாரம் மொத்த வியாபார லாப எல்லை 8 வீதமாகவும் சில்லறை வியாபார லாப எல்லை 12 வீதமாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது.

இப்புதிய மாற்றத்தின் காரணமாக வியாபாரிகளால் விற்கப்படாது வைக்கப்பட்டிருந்த ஏராளமான சட்டை, ஷர்ட், சூட் பருத்தித் துணிகள் சீக்கிரம் கடைத்தெருவிற்கு கொண்டு வரப்படும்என்று அறியப்படுகிறது.

இக் கட்டுப்பாட்டின்படி ரூ. 3,000,000 பெறுமதியான 1,000,000 கெஜம் துணிகள் விற்பனைக்கு வியாபாரிகளால் விடப்படும்.

இப்புதிய மாற்றம் ஜூலை மாதம் 14-ம் தேதக்குப் பின் வந்த சகல பிடவைகளின் விலையையும் பாதிக்கும்.

திருவாளர்கள் எஸ். செல்லமுத்து, ஜோன், செல்லப்பா, எல். ஈ. ஜே பொன்னம்டோ, எச். ஜே ஹச்சிங்ஸ், டி. பெசுமால், கே. ஜி. ராவ், வி. எஸ் குப்தா, எப் எக்ஸ் ஏ பெரேரா, எஸ் சிவநாதன், டி. எஸ் துரைராஜா, டி. மயில்வாகனம் முதலிய பிரபல வர்த்தகர்களடங்கிய பிரதிநிதிகள் இது சம்பந்தமாக முன்னர் புதிய மந்திரியைப் பேட்டி கண்டனர். இப்பேட்டியின் போது திரு. எஸ். நடேசன் அட்வக்கேட், வர்த்தகர்களின் சட்டப் பிரதிநிதியாகவிருந்தார்.

ஜூடிஷியல் கமிஷன் இருவர் நியமனம்

கொழும்பு, அக். 5

கவர்னர் நேற்று கீழ்க்கண்ட இருவரை ஜூடிஷியல் சேர்விஸ் கமிஷன் மெம்பர்களாக நியமித்திருக்கிறார்:-

(1) நீதிபதி திரு. இ. ஏ. எல். விஜயவர்த்தன கே. சி.

(2) நீதிபதி திரு. சி. நாகலிங்கம் கே. சி.

பிரதம நீதிபதி கமிஷனின் சேர்மனாக இருப்பார்.

இலங்கை விமானங்களுக்குத் தலைமைச் சாரதி

திரு பர்னன்டோ நியமனம்

கொழும்பு, அக் 5

இந்திய தேசிய ஆகாய மார்க்க சேவையில் கடந்த 7 வருஷமாக பிரதம சாரதியாகக் கடமையாற்றிவரும் கேப்டன் எஸ். பி. ஜே. பர்னன்டோ இலங்கை பொதுஜன ஆகாய விமானப் போக்குவரவு இலாகாவில் பிரதம சாரதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இவர் இந்திய தேசிய ஆகாய விமான சேவைப் பகுதியினரிடம் ஒப்பந்தத்தின் பேரில் ஆறுமாத கால சேவைக்காக இலங்கைக்கு அழைக்கப்பட்டவராவர்.

பட்டாளத்திலிருந்து மேலும் வேலை நீக்கம்

கொழும்பு, அக். 5

எி. டி. எப். பட்டாளத்தில் சேவை செய்து வருபவர்கள் பலர் சீக்கிரம் தமது வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள் என்று அறியப்படுகிறது.

ஒரு சிலர் மட்டுமே நிரந்தர எி. டி. எப். படையில் சேவை செய்வதற்காக வைத்துக் கொள்ளப்படுவர்.

உத்தரவின்றி இலங்கையில் பிரவேசம்

டென்மார்க் வாசிக்குச் சிறைத் தண்டனை

கொழும்பு, அக். 5

டென்மார்ககைச் சேர்ந்த வில்லி சொரன்ஸன் என்பவர் இலங்கையில் எவ்வித அனுமதியும் இன்றிப் புகுந்ததற்காக நேற்று மூன்தினம் கொழும்பு உதவி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தான் குற்றவாளி என்பதை ஒப்புக்கொண்டதன் பேரில் அவருக்கு 14 நாள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. மேற்படி தண்டனைக் காலத்துள் டென்மார்க்குக்குப் போவதற்கு வசதி ஏற்படும் பட்சத்தில் அவரை உடனே அனுப்பி வைக்கப்படவேண்டும் என்றும் மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார்.

இந்தியாவில் நாணயச் செலாவணிக் கட்டுப்பாடு

இலங்கையிலுள்ள வர்த்தகர்களின் சங்கடம்

நாணயப் பரிவர்த்தனைக் கமிஷனரிடம் முறையீடு

கொழும்பு, அக். 4

இந்தியாவிலிருந்து பணம் வெளியேறுவது வெளிநாடுகளிலிருந்து இந்தியாவுக்குள் பணம் வருவது ஆகியவை சம்பந்தமாக இந்திய சர்க்கார் புதிதாக நாணயச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டங்களை பிரயோகம் செய்திருக்கிறார்கள். இக்கட்டுப்பாட்டுச் சட்டங்களால் இப்பொழுது இலங்கையிலுள்ள வர்த்தகர்களுக்கு, முக்கியமாக இந்திய வர்த்தகர்களுக்கு மிகுந்த சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதாவது பாங்குகள் மூலமாகவன்றி மற்ற வழிகள் மூலமாக இந்தியாவுக்குப் பணம் அனுப்பியும் இந்தியாவிலிருந்து பணம்வரவழைத்தும்வரும் வர்த்தகர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இக்கஷ்டங்கள் ஏற்படுவதற்குப் பல காரணங்களிருக்கின்றன. அவைகளிலொன்று இப்பொழுது இந்திய ரூபாயின் விலைமதிப்புக் குறைந்திருப்பதேயாகும். இதற்கு முன் இலங்கைப் பணத்தை இந்தியா பணமாக மாற்றினால் நாணய மாற்று வர்த்தகர்கள் 100 இலங்கை ரூபாய் நோட்டுக்கு ஒரு ரூபாய் அதிகமாக கமிஷனாகக் கொடுத்து வந்தார்கள். ஆனால் இப்பொழுது, 100 இந்தியா ரூபாய் நோட்டுக்கு 90 இலங்கை ரூபாய்தான் கொடுக்கிறார்கள். இதற்குக் காரணம் இலங்கையில் ஏராளமான இந்தியா ரூபாய் நோட்டுகள் குவிந்து கிடப்பதேயாகும்.

இந்திய சர்க்கார் நாணயச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டப்படி இப்பொழுது இலங்கையிலுள்ள இந்திய ரூபாய் நோட்டுகளைத் திரும்பவும் இந்தியாவுக்கு அனுப்ப முடியாது. ஆகவே இந்திய ரூபாய் நோட்டுகள் வைத்திருப்பவர்கள் 100 ரூபாய்க்கு 10 ரூபாய் நஷ்டப்பட்டு அதாவது 100 இந்தியா ரூபாய் நோட்டை 90 இலங்கை ரூபாயாக மாற்ற அவர்கள் கஷ்டப்படுகிறார்கள் இக்கஷ்டத்தை நிவர்த்திக்க வழிதேடும் பொருட்டு இந்திய ரூபாய் நோட்டுகள் வைத்திருக்கும் வர்த்தகர்கள் இலங்கை நாணயச் செலாவணி, நாணயப் பரிவர்த்தனைக் கட்டுப்பாடு கமிஷனர்களிடம் தங்கள் குறைகளைத் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்தியாவில் நாணயச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை மீறுகிறவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்படுகிறது. மேலும் இந்தியாவுக்குள் அனுப்பப்படும் பணத்திற்கு பலவிதமாக வரி விதிக்கப்படுகிறது. இலங்கையில் இவ்வளவு இந்திய ரூபாய் வைத்திருந்ததற்குக் காரணம் காட்டும்படி இந்தியாவில் அதிகாரிகள் கேட்பதால் அதற்குப் பதில் சொல்லவேண்டுமென்று இலங்கையிலுள்ள சில வர்த்தகர்கள் தத்தளித்துக்கொண்டிருக்கிறார்கள்.

அரசாங்க குமாஸ்தாக்கள் வேலை நிறுத்தம் செய்ததேன்?

காரணம் கூறுக! இன்றேல் வேலை நீக்கம்!

இலங்கை அரசாங்கத்தின் கெடுபிடியான நடவடிக்கை

["சுதந்திரன்" அரசியல் நிருபர்]

கொழும்பு, அக். 5

தொழிற்சங்க உரிமை வேண்டி சென்ற ஜூன் மாதத்தில் அரசாங்கக் குமாஸதாக்கள் வேலை நிறுத்தஞ் செய்தார்கள். இவ்வுரிமையை தாங்கள் மறுக்கவில்லை யென்றும் பாராளுமன்ற சபை கூடியதும் ஆவன செய்யலாம் என்றும் திரு. டி. எஸ். சேனநாயக்காவும் கவர்னரும் கூறினார்கள்.

வேலை நிறுத்தம் செய்த சிலருக்கு இப்பொழுது அவர்கள் வேலை நிறுத்தஞ் செய்ததற்கு காரணம் காட்டாவிட்டால் வேலையினின்றும் அகற்றப்படுவார்கள் என்று அரசாங்கம் அவரவர்களின் இலாகா தலைவர்கள் மூலம் அறிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

(1) சென்ற ஜூன் மாதம் 28-ம் தேதி காலபேஸ மைதானத்தில் நடந்த தொழிற்சங்கக் கூட்டம் சம்பந்தமாக முன்பு குற்றஞ்சாட்டப்பட்டு மீண்டும் வேலையில் அமர்த்தப்பட்ட கவர்ன்மெண்ட் சேர்வேயஸ் சங்கத் தலைவராகிய திரு. எஸ். ஆர் யாப்பா இப்பொழுது பழைய ஜூன் மாத வேலை நிறுத்தத்தைத் தூண்டியதற்காக என் வேலையினின்றும் அவரைத் தள்ளக்கூடாது என்று காரணங்காட்டுமாறு கேட்கப்பட்டிருக்கிறார்.

(2) கவர்ன்மெண்ட்சேர்வேயஸ சங்கக் காரியதரிசியாகிய திரு. கிறிஸ்டி பெரேராவை ஜூன் மாத வேலை நிறுத்தத்தை தூண்டியதான குற்றச்சாட்டிற்கு தம்முடைய நிலைமையை விளக்குமாறு கேட்கப்பட்டிருக்கிறார்

(3) தபால் தந்தி இலாகா குமாஸதாக்கள் சங்கக் காரியதரிசி திரு ஸீ காசிநாதன் அவருடைய யூனியனின் தீர்மானம் ஒன்றை அரசாங்கத்திற்கு அனுப்பியதாகிய குற்றச்சாட்டிற்குப் பதிலிறுக்குமாறு கேட்கப்பட்டிருக்கிறார். திரு. காசிநாதன் இப்பொழுது தற்காலிகமாக வேலையினின்றும் நிறுத்தப்பட்டிருக்கிறார்.

(4) கவர்ன்மெண்ட் சுருக்கெழுத்தாளர் சங்கத் தலைவராகிய திரு ஜே. ஈ. ஏ. மோட்டிமர் வேலை நிறுத்தக்காரர்களின் கூட்டத்தில் தலைமை வகித்ததாகிய குற்றச்சாட்டிற்கு மறுமொழியளிக்குமாறு கோரப்பட்டிருக்கிறார். அவர் இப்பொழுது தற்காலிகமாக வேலையினின்றும் நிறுத்தப்பட்டிருக்கிறார்.

(5) வேலையினின்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுங்க இலாகா சங்கக் காரியதரிசியாகிய திரு கே. சிக்கேரு வேலை நிறுத்தக்காரர்களின் கூட்டங்களில் தலைமை வகித்த குற்றச்சாட்டிற்கு மறுமொழி கொடுக்குமாறு ஒரு நிருபம் பெற்றுள்ளார்.

(6) அரசாங்க குமாஸ்தாக்கள் வேலை நிறுத்தங்களில் முக்கிய பங்குபற்றிய குற்றச்சாட்டிற்குத்தக்க பதில் கொடுக்குமாறு வருமான வரி இலாகாவைச் சேர்ந்த திரு. பாக்கியநாதன் வவுனியா காணிப்பதிவுக் கந்தோரைச் சேர்ந்த திரு. எம். எஸ். இராஜசிங்கத்தையும், இன்னும் ரிஜிஸ்டிரார் ஜெனரல்ஸ் இலாகாவைச் சேர்ந்த ஒருவரையும் கேட்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

பாராளுமன்றத்தின் நியமனப் பிரதிநிதிகள்

கவர்னர் நியமித்திருக்கும் 6 பேர்கள்

கொழும்பு, அக் 5

கவர்னர் நேற்று கீழ்க்கண்ட 6 பேர்களை பாராளுமன்றத்தின் நியமனப் பிரதிநிதிகளாக நியமித்திருக்கிறார்:-

1. திரு இ. எப். என். கிரேஷியன் கே. சி.
2. „ எப். எச். கிரிபித்
3. „ ஜேம்ஸ். ஏ. மார்ட்டன்ஸ்
4. „ மேஜர் ஜே. டப்ளியூ ஒல்டஸில்ட சி. எம். ஜி., ஓ. பி. இ., எம் எி.,
5. „ எஸ். ஏ. பேக்மன், ஓ பி. இ., எம். எி, இ டி.
6. „ ஜி ஆர். விட்பி.

வெள்ள நிவாரணக் கார்ணிவல்

கொழும்பு, அக். 5

விக்டோரியாப் பார்க் எதிரிலிருக்கும் "எல்ஸ்கோட் மேனர்" என்னும் இடத்தில் இன்று பிற்பகல் 6 மணியளவில் திருவாளர் ஜீ ஜீ. பொன்னம்பலம் அவர்களும் அவரது பாரியாரும் வெள்ள நிவாரணக் கார்ணிவலைத் திறந்து வைப்பார்கள்.

மீண்டும் உலகாளும் ஆசை

கன்சர்வேடிவ் மகாநாட்டு விபரங்கள்

இந்திய சுதந்திரம் வழங்கிய தொழிற்கட்சி அரசாங்கத்தின் மீது பாய்ச்சல்

பிறைட்டன், (இங்கிலாந்து) அக் 3

இங்கு 3000 பிரதிநிதிகள் கொண்ட கன்சர்வேடிவ் கட்சியின் மகாநாடு இன்று நடைபெற்றது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை ஐக்கியப்படுத்த வேண்டும் என்ற கோஷம், அடிமை நாடுகளின் செல்வாக்கு சாம்ராஜ்ய நாடுகளில் வளர்கின்றதே என்ற பிரலாபம், 10 லட்சம் ஸ்டெர்லிங் போராட்ட நிதியின் ஆரம்பம்-இவையே இம் மகாநாட்டின் முக்கிய நிகழ்ச்சிகள். போராட்ட நிதி வீழ்ந்து கிடக்கும் கன்சர்வேடிவ் கட்சிக்கு மீண்டு கொடுத்துத் தூக்கிப் பிடித்தது அதிகாரத்தில் அமர்த்த உபயோகிக்கப்படும் என்று தெரிகிறது.

நியூஜிலந்து பிரதிநிதி அன்ட்ரூ பொன்டேன் பிரிட்டனிலும் சாம்ராஜ்யத்திலும் வளர்ந்துவரும் துஷ்ட சக்திகளை முறியடிப்பதுபற்றி ஓர் தீர்மானத்தைப் பிரேரித்தார். இது பிரிட்டனில் கமியூனிஸ்ட் கை வரிசைபற்றிக் கொண்டுவரப்பட்ட மற்றோர் தீர்மானத்துடன் சேர்த்து எடுத்துக் கொள்ளப்படும்.

இந்தியாவுக்கு சுதந்திரம் கொடுத்த தொழிற்கட்சி அரசாங்கத்தின் மீது பிரஸ்தாப நபர் கடுமையாகப் பாய்ந்தார். "இந்தியாவின் இன்றைய நிலைக்குக் கமியூனிஸ்ட் செல்வாக்கே காரணம்" என்றும் கூறினார். தொழிற் கட்சியின் பாலஸதீன சம்பந்தமான கொள்கையையும் அவர் தீவிரமாகத் தாக்கினார்.

பழைய இந்தியாமந்திரி அமெரி, குடியேற்ற நாட்டு மந்திரி ஒலிவர் ஸ்டான்லி எல்லாரும் சாம்ராஜ்ய ஒற்றுமை வேண்டும் என்று எடுத்தோதினார்கள். மற்ற நாடுகளுடன் ஒப்பந்தம் செய்கையில் பிரிட்டனுக்கு விசேஷ அந்தஸது கொடுக்கும் சுங்க வரித் திட்டத்தில் மாற்றம் ஏற்படுத்த வேண்டாம் என்றும் அரசாங்கத்திடம் மேற்படி மகாநாட்டில் வேண்டிக் கொள்ளப்பட்டது.

இளைஞன் வெளியீடு! வெளிவந்துவிட்டது!

தெல்லியூர் எஸ். நடராஜன் எழுதிய

"தமிழன் மாட்சி"

தமிழகத்தின் பெருமையையும் செழுமையையும் அழகாகத் தொகுத்து எழுதப்பட்ட சிறிய நூல். தமிழர் அகங்களில் அவசியம் இருக்கவேண்டியது. இளைஞர்களுக்கேற்ற நடையில் தெளிவாக எழுதப்பட்டுள்ளது.

"இவ் வெளியீடு தமிழ் மாணவர்க்குப் பயன்தரு நீர்மையதாகும் என்பது எனது உள்ளக் கிடக்கை." —ஸ்ரீ விபுலானந்தர்.

தனிப்பிரதி ரூ. 1-25. தபாற் செலவு சதம் 25.

புத்தக வியாபாரிகளுக்கு 20 சதவிகித கமிஷன் உண்டு.

அக்டோபர் 10-ந் தேதிக்குமுன் முற்பணமனுப்புவோருக்கு 15-ந் தேதிக்குமுன் தபாற் செலவின்றிப் புத்தகம் அனுப்பிவைக்கப்படும்.

THE ELAIGNAN PUBLISHERS,
No-2, Grandpass Road,
COLOMBO.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
194 ஏ, நட்டாரத் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வஜித்து ஞா புரட்டாசி மீ 19உ
ஞாயிற்றுக்கிழமை

மழை விட்டும் தூவானம் ஓயவில்லை

தேர்தல் முடிந்தது. சோல்பரித் திட்டத்தை பொது மக்கள் ஆதரிக்கவில்லையென்பது வெளியாயிற்று. அவ்விதம் கொடுக்கப்பட்ட பொது மக்களின் தீர்ப்பை அவர்களது பிரதிநிதிகள் எப்படி நிறைவேற்றப் போகிறார்கள் என்பதை பொது ஜனங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாய் நாம் சுதந்திரனில் எழுதிவந்த விஷயங்களை ஊன்றி வாசித்து வந்தவர்களுக்கு உண்மை நன்கு விளங்கும். நாம வெளிப்படையாகச் சில விஷயங்கள் கூறுவதில் பல தலைவர்களுக்கு வருத்தமிருக்கலாம். அதற்காக உண்மையைக் கூற நாம பின்வாங்கப்போவதில்லை.

'யதார்த்தவாதி வெகு ஜன விரோதி" என்பது உண்மையாகிவிட்டது. நாம் எதிர்க்கட்சித் தலைவர்களைப் பற்றிச் சொன்ன விஷயம் உண்மை என்பது அப்பலத்திற்கு வந்து விட்டது. இந்த எதிர்க் கட்சித் தலைவர்கள், கூட்டத்தவர்கள் தாங்கள் வாக்காளர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை வெகு சீக்கிரம் மறந்துவிட்டார்கள் என்றே எண்ணவேண்டியிருக்கிறது. இந்த எதிர்க்கட்சியார்களுள் பல வகைப்பட்ட அபிப்பிராயங்களுக்கிடையே ஒற்றுமைப்பட்ட அபிப்பிராயம் இருப்பதை இவர்கள் மறந்தது தான் வருந்தத்தக்கது. அதாவது யூ. என். பி. முதலாளிக் கட்சியை உடைக்க வேண்டும். சோல்பரித் திட்டத்தைத் தள்ளி சுய நிர்ணயத்தில் ஓர் திட்டம் வகுக்கவேண்டும். அதுவரையில் தற்காலிக மந்திரி சபை எல்லாக் கட்சி அங்கத்தவர்களைக் கொண்டதாய் நிறுவவேண்டுமென்பதே!

மேலே கூறிய கொள்கையை சமசமாஜக் கட்சி மறுக்கிறதா? அல்லது கொல்வின் ஆர். டி சில்வா கட்சிதான் மறுக்குமா? கமியூனிஸ்ட் கட்சி சுவரிஸ் மேல உட்காரலாம். தமிழ்க காங்கிரஸ் இதை மறுக்குமா? மற்ற சுயேச்சையாளர்களில் எவ்வளவு பேர்கள் மறுப்பார்கள்? பொதுமக்களே யோசிக்க வேண்டும் தங்களுடைய சொந்தக் கொள்கைகளைப் பொட்டணம் கட்டிவைத்துவிடு பெலே கூறிய கொள்கைகளுக்குச் சோக் கூடியவர்களை ஏன் சேர்த்து வேலை செய்யக் கூடாது என்றுதான் கேட்கிறோம்.

இந்த நெல்லிக்காய் மூட்டைக்கட்சிகள் எங்கே சேர்ந்து விடப்போகிறதா என்ற பயம் திரு. சேனநாயக்காவிற்கு இல்லாமலில்லை. அவர் அதற்கும் எச்சரிக்கையாகவேதான் இருக்கிறார். இன்னும் 5 உப மந்திரி ஸ்தானங்களைக் காலியாக வைத்துக்கொண்டு எதிர்க் கட்சிக்காரர்களுக்கு ஆசை காட்டிக் கொண்டுதான் இருக்கிறார். சிலர், வெளியில் வீராகள்போல் பேசி வருகிறவர்களும் இரவு நேரங்களில் சேனநாயக்காவின் நண்பர் வீட்டுக்குப் போய்க் கொண்டுவருகிறார்கள் எந்த நேரத்தில இவர்கள் அவ்வலையில் சிக்குவார்கள் என்று சொல்ல முடியாது.

இரண்டாவதாக, பாராளுமன்றச் சபையின் வேலைக் கூடத்தைச் சமீபத்தில் கூட்டாமல் வட்டுவிடுவது என்ற நோக்கமும் இருந்து வருகிறது. சோல்பரி திட்டப் பிரகாரம் மாதா மாதம் கூட்டம் நடைபெற வேண்டிய அவசியமில்லை அக்டோபர் 8உ கூட்டம் கூடி அக்கிராசனர், சேனட்டர்கள் தெரிவு முடிந்ததும் நவம்பர் 25உ கூட்டம் ஒத்தி வைக்கப் போகிறார்களாம். அப்பொழுது கவர்னர் பேசுவார். கவர்னர் பேசிய பிறகு அவரது பிரசங்கத்தின்மேல விவாதம் நடக்க ஒரு தேதி குறிப்பிடப்படும். அதன் பிறகு மறுகூட்டம் ஐனுவரிக் கடைசிக்கு வைத்து விட்டால் எதிர்க் கட்சியார்களின் விவாதங்களுக்கு இடமிராது. பெப்ரவரி மாதம் டொமினியன் அந்தஸ்து வரப் போகிறது. அதற்கான ஒப்பந்தங்களை மந்திரிகள் செய்யத்திட்டம் போடலாம். இதற்குள்ளாக சேனநாயக்காவும் 60 அங்கத்தவர்களைத் தன் கட்சிக்குச் சேர்த்துவிடலாம். அப்படிச் சேர்க்க முடியாவிட்டால்-அல்லது டொமினியன் அந்தஸ்து வந்து விட்டால, தனக்கு இந்த வெற்றி போதும் என்று சொல்லி அரசியலிலிருந்து விலகிக் கொள்ளலாம். இப்படி விலகிக் கொள்ளப் போவதாகப் பிரஸ்தாபம் வெளிவருகிறது. காரணம் என்ன? திரு. பண்டார நாயக்கா தனது சிங்கள மகாசபா கட்சிக்குப் போதிய மந்திரிப் பதவிகள் கொடுக்கப்படவில்லையென்ற மனத தாங்கல இடபொழுது இருக்கிறது பெப்ரவரிமாதம் சேனநாயக்கா விலகினால் தனக்கு பிரதம மந்திரிப் பதவி கிடைக்கும் என்ற ஆசையில் ஒட்டிக் கொண்டு திரிவார் என்ற நோக்கமும் போலும்.

இந்நிலையில் எதிர்க்கட்சிக்காரர்கள் ஏமாந்த சோணகிரிகள் ஆவார்கள் தாங்கள் தங்கள் வாக்காளர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற முடியாது போகும். மறுபடியும் இவர்கள் தங்கள் அங்கங்கள் தோதல் தொகுதிகளில தலைகாட்ட முடியாது போகும் என்பதை மறக்க வேண்டாம். இருக்கும் நிலையைக் கவனிக்கையில் திரு. சேனநாயக்காவிற்கு ஜாதகத்தில் குரு 9-ம் இடத்தில் ஆட்சிசெலுத்துகிறார் என்றெண்ண வேண்டியிருக்கிறது.

ஆராச்சிக்கு அனுமதியோம்

ரஷியாவில் பிரவேசிக்க அமெரிக்க கோஷ்டிக்குத் தடை

மாஸ்கோ, அக். 3

அமெரிக்க செனட சபையின் புள்ளிவிவர ஆராய்ச்சிக் கமிட்டியார் ஐரோப்பாவில சுற்றுப் பிரயாணம் செய்துவருகிறார்கள். அவர்கள் ரஷியாவிலிருக்கும் அமெரிக்க ஸ்தானிகர் காரியாலயத்துக்கு விஜயம் செய்ய சோவியத சர்க்காரிடம் அனுமதி கோரினார்கள். ஆராய்ச்சி செய்யும் நோக்கத்துடன் இவர்கள் ரஷியாவுக்குள பிரவேசிக்க முயற்சப்பதால் அவர்களுக்கு 'அனுமதியளிக்க சோவியத் சர்க்கார் மறுத்துவிட்டார்கள். அமெரிக்க காங்கிரஸ அங்கத்தினர்கள் ஏராளமானவர்கள் ஐரோப்பாவுக்கு வந்து அங்குள்ள பல நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்வதன் நோக்கம் அந்நாடுகளின் உள் நாட்டு விவகாரங்களில் தலையிட்டு அமெரிக்க டாலர் ஆதிக்கத்தை நிறுவுவதேயாகும் அதலால் அந்தமாதிரி ரஷியாவிலும் அவர்கள் ஆராய்ச்சசெய்ய சோவியத் சர்க்கார் அனுமதிக்கமுடியாது. அரசாங்க ஆநிபத்தியக் கொள்கைகளுக்கு இந்த அமெரிக்க நடத்தை முரணானதாகும்.

'இஸவெஸ்டியா' பத்திரிகை மேற்கூறியவாறு எழுதியிருக்கிறது. [ராய்ட்டர்]

புதிய யுத்தம் உண்டாகும்

ஆஸ்திரிய அந்நிய நாட்டு மந்திரி எச்சரிக்கை

வியன்னா, அக். 3

சிறுபான்மைக் கட்சியினர் சர்வாதிகாரி ஆட்சிக்கு ஆளதிரியாவைப் பலிகொடுப்பின் அது புதிய யுத்தம் மூளுவதற்கு ஒரு காரணமாகிவிடும். ஆஸ்திரியாவைச் சுற்றி கமியூனிஸ்டு ஆட்சியுள்ள அல்லது கமியூனிஸ்டு ஆட்சி ஏற்படவிக்கும நாடுகள் சூழ்ந்திருப்பதால் ஆஸ்திரிய ஜனநாயகத்திற்கு ஆபத்து ஏற்படடிருக்கிறது. இங்கும் சிறுமான்மையான கமியூனிடுகள் சர்வாதிகார ஆட்சி நிறுவ பயமுறுத்தி வருகிறார்கள் ஆஸதிரிய கமியூனிடுகளைப்பற்றி நாங்கள் பயப்படவில்லை. ஆனால் அவர்களுக்குப் பின்னால இருந்து இயக்கும் ஒரு வல்லரசைப் பற்றியே அஞ்சுகிறோம் என்று ஆஸதிரிய அந்நிய நாட்டு மந்திரி டாக்டர் குருபர் தெரிவித்தார் (ராய்ட்டர்)

பிர்லா மாளிகை புனித க்ஷேத்திரமாயிற்று

மகரிஷிபோன்று மகாத்மா வீற்றிருந்த காட்சி

காந்திஜியை தரிசிக்க ஸ்தானாதிபதிகள், மந்திரி பிரதானிகள் விஜயம்

உலகெங்குமிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்தன

ஹிந்து-முஸலிம்-சீக்கிய கூட்டுப் பிரகடனமும் ஹரிஜன நிதிக் காணிக்கைகளும் சமர்ப்பணம்.

புதுடில்லி, அக். 2

இன்று புதுடில்லியிலுள்ள பிர்லா மாளிகை யாத்திரீகர்கள் பக்திபரவசமுடன் வந்து குவியும் மகா புண்ணிய க்ஷேத்திரமாக விளங்கியது. அதிகாலையிலிருந்து இந்தியாவின் தந்தையாம் மகாத்மாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு அவரைத் தரிசிப்பதற்கு அந்நிய அரசாங்கங்களின் ஸ்தானாதிபதிகளும், சர்க்கார் மந்திரிகளும், காங்கிரஸ் தலைவர்களும், முஸலிம் பிரமுகர்களும், பாமர மக்களும் மாளிகைக்கு வந்தவண்ணமிருந்தார்கள். அவர்கள் மகாத்மாவுக்கு காணிக்கையாக புஷ்பங்களையும் பழவர்க்கங்களையும் ஹரிஜன நிதிக்காகத் திரவியங்களையும் கொண்டுவந்து சமர்ப்பித்தார்கள்.

உலகின் எல்லா பாகங்களிலுமுள்ள அறிஞர்கள், ஸ்தாபனங்கள், அரசாங்கங்கள் அனுப்பிய வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்த வண்ணமிருந்தன

மகாத்மா காந்தி மிகக மகிழ்ச்சியும் உற்சாகமுமுடையவராக தன்னை தரிசிக்க வந்தவர்களிடம் கலகலவென சிரிக்கும் தமாஷாகப் பேசி மற்றவர்களை சிரிக்க வைத்தும் அவர்களுடன் அளவளாவி— உரையாடிக்கொண்டிருந்தார் மகாத்மா இன்று ஈஸ்வர பிரார்த்தனையிலும் உண்ணாவிரதமிருந்தும் நூல் நூற்றும் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடினார் மாளிகையிலும் மற்ற இடங்களிலும் நூற்றுக் கணக்கான கைராட்டினங்கள் சுழன்றுகொண்டிருந்தன.

இன்று காலையில் பிர்லா மாளிகையில் பிரார்த்தனைக் கூட்டமும், நகரில் மாணவர் ஊர்வலங்கள், மாலையில் பொதுக் கூட்டம், ரேடியோவில் மந்திரிகள், ராஷ்டிரபதி பிரசங்கங்கள் நடைபெற்றன

பிர்லா மாளிகையில் இன்று மகாத்மா காந்தி வீற்றிருந்த காட்சி உலகம் செழிக்க ஒளிரும் சூரியனைப்போன்றிருந்தது. அவரது அகன்ற நெற்றியில் செந்நிற குங்கும திலகமணிந்து வதனத்தில் ஆனந்தம் தவழ பூரணமான தேக ஆரோக்கியம் பொலிவுற பால்போன்ற பஞ்சு மெத்தையில் உட்கார்ந்து அவர் தன்னைத் தரிசிக்கவந்தவர்களை வரவேற்றார் கடைசியாகத் தனது உள்ளதைப் பறிகொடுத்த அவரது சீடரான ஷாஹீத் சஹ்ரவர்தியான வங்காளத்தின் மாஜி பிரதம மந்திரி மகாத்மாவின் காலடியருகே அன்பும் பணிவுமுடையவராக வீற்றிருந்தார்.

மௌலானா ஆஸாத்

புதுடில்லி, அக். 2

இன்று மாலை மௌலானா அபுல்கலாம் ஆஸாத் ரேடியோவில் பேசியதாவது:-

இன்று மகாத்மா காந்தியின் 79-வது பிறந்த தினம். அவர் தமது வாழ்க்கையில 50 வருஷ காலத்தை மனித வர்க்கத்தின் நலனுக்காகவும் அமைதிக்காகவும் கழித்திருக்கிறார். அவருடைய பிறந்த தினத்தைக் கொண்டாடும் இன்று லக்ஷக்கணக்கான நமது தேசமக்களின் உயிர்களுக்கு என்ன நேர்ந்து கொண்டிருக்கிறதென்பதை நாம் மறக்கக் கூடாது. உலகத்திற்கே மாபெரும் புருஷோத்தமரை அளித்த அதே இந்தியா எந்தக் கொள்கைக்காக அந்தப் புருஷோத்தமர் பாடுபடுகிறாரா அந்த அவருடைய கொள்கைகளையும் அமைதியையும் இன்று தேசம் நாசம் செய்து கொண்டிருக்கிறது.

சற்பொழுதைய நெருக்கடியிலிருந்து நாம நமது தேசத்தைக் காப்பாற்ற வேண்டுமானால், சர்க்கார் இதை அடக்கி அமைதியை ஏற்படுத்த வேண்டும். இதில் நீங்கள் சர்க்காருடன் ஒத்துழைக்க வேண்டும்.

பிரார்த்தனைப் பிரசங்கம்

புதுடில்லி, அக். 2

இன்னும் மகாத்மா காந்தி பிரார்த்தனைக்குப் பின் பேசினார்.

முதலில் அவர் இன்று மாலை தாம் பாபா சர்தார் கரகசிங்கின் காரியதரிசி சர்தார் சந்தோஷ் சிங்குடன் சம்பாஷித்ததைக் குறிப்பிட்டார். அந்த நண்பர் முஸலிமகளை கொல்லும்படி குரு கோவிந்தசிங் சீக்கியருக்கு உபதேசித்தாரென்பது தவறென்பதை ஊர்ஜிதம் செய்தார் பத்தாவது குரு தமது ஜனங்களுவழியில எந்த முறையிலும் எங்கும் எந்த பெயரிலும் கடவுளை பூஜிக்கலாமென்று கூறுகிறார்.' "எல்லோருக்கும் கடவுள் சமம்; இன்றும் கூறப்போனால் மனிதர் ஒரே குலமே" மனிதரில் வேற்றுமை உண்டென்று கருதக்கூடாதென்று குரு கோவிந்த சிங் போதித்திருக்கிறார் தனிப்பட்டவர் குணத்திலும் தோற்றத்திலும் வேறுபடலாம் ஆனால் எல்லோரும் ஒரே குலமே. நமக்கு மனிதருக்கு ஒரே மாதிரி உணர்ச்சிகள் உண்டு; நாம் அனைவரும் மரணமடைந்து மண்ணோடு ஐக்கியமாகிறோம். எல்லோருக்கும் சூரியன் சமமே. கங்கை நதி ஒரு முஸ்லிமுக்கு தனது குளிர்ந்த ஜலத்தை தாமறுக்கவில்லை. எல்லோர் மீதும் சமமாகவே மேகம் மழை பொழிகிறது. குணம் கெட்ட மனிதனே தனக்கும் தமது சகாவுக்கும் வேற்றுமை பாராட்டுகிறான்.

இந்திய யூனியன் ஹிந்து ராஜ்யமாகவிருக்க வேண்டுமென்று கூறுவது தவறாகும்.

லேடி மவுண்ட்பேட்டன் மரியாதை

புதுடில்லி, அக். 2

மகாத்மா காந்திக்கு அவருடைய 79-வது ஜெயந்தியை முன்னிட்டு உலகத்தின் பல பாகங்களிலிருந்து வாழ்த்துச் செய்திகள் கிடைத்திருக்கின்றன.

மாஜி இந்தியா மந்திரி லார்டு பெதிக்லாரன்ஸும் அவருடைய மனைவியும் மகாத்மா காந்திக்கு ஒரு வாழ்த்துக்கடிதம் அனுப்பியிருந்தனர்.

இந்திய கவர்னர் ஜெனரலான மவுண்டபேட்டனை மனைவி இன்று பிற்பகலில் காந்திஜியைச் சந்தித்து தன் சார்பாகவும் தனது கணவர் சார்பாகவும் வாழ்த்தைத் தெரிவித்துக்கொண்டார். அவர் காந்திஜியுடன் அரை மணி நேரம் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்.

நூற்றுக்கணக்கான மக்கள் பிர்லா மாளிகைக்குச் சென்று காந்திஜியைத் தரிசித்தனர் காந்திஜியின் குடும்பத்தினரும் அவருக்கு மரியாதை செலுத்தும் பொருட்டு பிர்லா மாளிகைக்குச் சென்றனர். பிரார்த்தனைக்கூட்டம் ஆரம்பமாகும் வரை காந்திஜியை ஜனங்கள் தரிசனம் செய்துகொண்டிருந்தனர்.

நேரு மீண்டும் வந்தார்

பண்டித நேரு இரண்டாவது தடவையாக காந்தியை இன்று சந்தித்தார். அவர் காந்திஜியுடன் நீண்ட நேரம் சம்பாஷித்துக்கொண்டிருந்தார். பிரார்த்தனைக்குப் பின்னர் மகாத்மா காந்தி தமது 24 மணி நேர உண்ணாவிரதத்தை நிறுத்தி உணவு அருந்தினார்.

மகாத்மா காந்தி மிகவும் களைப்பாகக் காணப்பட்டார். வழக்கமான நேரத்தைப் பார்க்கிலும் சீக்கிரமாகவே காந்திஜி இரவு 9 மணிக்கு நித்திரைக்குச் சென்றார்.

சிலர் மகாத்மாவுக்குக் காணிக்கை சமர்ப்பித்தனர். ரூபா-3000 காணிக்கை சேர்ந்தது.

பண்டித நேரு

புதுடில்லி, அக் 2

டில்லியிலுள்ள அயல் நாட்டு ஸ்தானிகர்களெல்லோரும் மகாத்மா காந்தியைக் கண்டு தம் நல் வாழ்த்தைத் தெரிவித்துக்கொண்டனர்.

பண்டித நேருவும் அவருடைய சகாக்களும் காலையிலேயே காந்திஜியைக் கண்டு போயினர்.

சத்திய சீலரும் அஹிம்ஸா மூர்த்தியுமாகிய மகாத்மா காந்தியைப் பின்பற்றுமாறு இன்று டில்லியில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் பேசிய போது பிரதமர் பண்டித நேரு, உதவி பிரதமர், சர்தார் பட்டேல், ராஷ்டிரபதி ஆச்சாரியா கிருபளானி முதலியவர்கள் இந்திய மக்களைக் கேட்டுக் கொண்டனர். மகாத்மா காந்தியின் ஜெயந்தியை முன்னிட்டு டில்லி மாகாண காங்கிரஸ் கமிட்டியின் ஆதரவில் மேற்கூறிய பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பண்டித நேரு தமது பிரசங்கத்தில் கூறியதாவது:- மகாத்மா காந்தி காட்டும் அஹிம்ஸை, சத்தியம் ஆகிய வழிகளைப் பின்பற்ற வேண்டுமா? அல்லது சைறை சில இனங்களாகச் சமூகத்தின் விரோதிகள் காட்டும் பலாத்கார வழியைப் பின்பற்ற வேண்டுமா? என்பதுபற்றி மக்கள் முடிவுகட்டவேண்டும். 'மகாத்மா காந்திக்கு ஜே' என்று கோஷமிட்டு விட்டு, மக்கள் தமது சகோதரர்களிடம் பகை காட்டக்கூடாது. சட்டத்தையும் சமாதானத்தையும் மீறுபவர்கள் தேசத்திற்கு சொல்லொண்ணாத் தீங்கையும்கூடத்தையும் விளைவித்துவிட்டனர் இனி அச்செயல்களைச் சகித்துக்கொண்டிருக்க முடியாது. பாக்கிஸ்தானில் நமது உறவினர் கொலை செய்யப்பட்டதற்குப் பழி வாங்குவதோ அன்றி இந்திய யூனியனுக்கு வந்திருப்பவர்களின் உயிரைக் காப்பாற்றுவதோ இப்பொழுது ஏற்பட்டிருக்கும் பிரச்னையல்ல

"இந்தியாவின் சுதந்திரமும் வருங்கால சுபீட்சமும் ஆபத்திலிருக்கின்றன இந்த உண்மையை மக்கள் உணர்ந்து தமது தேசத்திற்கு அழிவு ஏற்படாமல் இருப்பதற்கு கண்யமாகவும் நேர்மையாகவும் உழைக்க வேண்டும்."

பிரதமர் பண்டித நேரு மேலும் கூறினார்:- மகாத்மா காந்தியின் கொள்கைகளைப் பின்பற்றியே நாம் அந்நியர் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றோம் சுதந்திரத்திற்கு ஒரு துணையாக இருந்த மகாத்மா காந்தியின் கொள்கைகள் இனியும் நமக்கு நன்மை பயக்கும். ஆகவே சுதந்திரப் போராட்டம் முடிந்துவிட்டபோதிலும் நாம் மகாத்மா காந்தியின் கொள்கைகளையே பின்பற்ற வேண்டும். மகாத்மா காந்தியின் உபதேசங்களும் கருத்துகளும் என்றென்றும் பின்பற்றப்படவேண்டியவை.

சர்தார் பட்டேல்

உதவி பிரதமர் சர்தார் பட்டேல் சுருக்கமாகப் பேசினார் அவர் கூறியதாவது:- "மகாத்மா காந்தி உபதேசம் செய்யும் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு அவற்றைப் பின்பற்றுவதுதான் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் தொல்லைகளை அகற்றுவதற்கு வழி. பொதுமக்கள் காந்திஜியின் விருப்பப்படி நடக்கா விட்டால் அவர்கள் அவருடைய ஜெயந்தியைக் கொண்டாடுவதிலும், பண்டித நேருவின் பிரசங்கத்தைக் கேட்பதிலும் பொருள் கிடையாது. கோபமும் ஆத்திரமும் தணிந்த பின்னர் மக்கள் தமது கொடிய செயல்களால் என்ன நன்மை அல்லது நஷ்டம் ஏற்பட்டுள்ளன வென்பதை தமது மனதில் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அவர்கள் தமது பலாதகாரச் செயல்களால் நஷ்டத்தைத் தவிர லாபம் ஒன்றும் ஏற்படவில்லையென்பதை உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

டாக்டர் ராதா கிருஷ்ணன்

புதுடில்லி, அக். 2

காந்தி ஜெயந்தி சம்பந்தமாக டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் ரேடியோ பிரசங்கத்தில் "இந்தியா விழிப்படைந்து தலைநிமிர்ந்திருப்பதற்குக் காரண பூதர் காந்தியே. அவர் தென்னாப்பிரிக்காவிலிருந்து வந்தபோது நமது நாடு நிர்க்கதியாக துயலுறுதல் போது திரௌபதிக்கு ஏற்பட்ட நிலைமையிலிருந்தது அந்நிலையை மாற்ற மகாத்மா முயற்சி எடுத்தார். எவ்வித முன்னேற்றமும் அரசியல் விடுதலையின்றி சாத்தியமல்ல வென்பதையும் காந்தி உணர்ந்து அவ்விடுதலைப் போராட்டத்திற்கு தலைமை தாங்கி சாதாரண மக்களையும் அதில் ஈடுபடும்படி செய்தார். பாமர மக்களிடம் அவரது உபதேசம் பரவியது அமைதியாக கொண்டு ஆயுதமின்றி நடத்திய புரட்சி ஆகஸ்ட் 15-ம் தேதி வெற்றியடைந்தது அந்த வெற்றிக்கு நமது தகுதியை நிரூபிக்க வேண்டுமானால் அரசியல் விடுதலையோடு நாம் திருப்தியடைந்து விடக்கூடாது. அரசியல் விடுதலை புதிய சமுதாயத்தையும் புதிய பொருளாதார அமைப்பையும் உருவாக்க சாதனமே தவர வேறல்ல

ராஷ்டிரபதி விளக்கம்

புதுடில்லி, அக். 2

சுதந்திரப் பிரச்னைக்கு அஹிம்ஸை மூலம் பரிகாரம் தேடியதுபோல் வகுப்புப் பிரச்னையையும் அஹிம்ஸை மூலம் தீர்க்க காந்திஜி கூறும் யோசனையை விளக்கி அகில ரேடியோவில் ராஷ்டிரபதி கிருபளானி பேசினார்.

பம்பாயில்

பம்பாய், அக். 2

பம்பாயில் எல்லா வகுப்பினரும் காந்தி ஜெயந்தியைக் கொண்டாடினார்கள். ஜின்னா மண்டபத்தில மேயர் பேசிய போது காந்திஜி ஒரு கர்மயோகி என்று தெரிவித்தார். பம்பாய் மேற்றிராணியார், பம்பாய் முஸ்லிம் லீக் தலைவர் முதலியோர் பேசினார்கள். இன்றைய கொண்டாட்டத்தில் ஹிந்து - முஸ்லிம் ஐக்கியம் சம்பூரணமாக இருந்தது.

இந்தியாவின் பிரபல சினிமா நடிகர்களும், பிரபல எழுத்தாளர்களும் 10 லொறிகளில ஏறி ஏராளமான ஜனத்திரளுடன் ஊர்வலமாக பொதுக் கூட்டத்திற்கு வந்தார்கள். இந்த ஊர்வலத்தில் 17 அரசியல் ஸ்தாபனங்கள் கலந்திருந்தன.

ராஜாஜி

கல்கத்தா, அக் 2

காந்தி ஜெயந்தி கொண்டாட்டம் சம்பந்தமாக கல்கத்தாவில் நடந்த ஒரு கூட்டத்தில் ராஜாஜி பேசுகையில் இந்தப் பயங்கர காரிருளிடையே காந்திஜியின் ஒளி சுடர்விட்டுப் பிரகாசிக்கிறதென்றார்.

பழிவாங்க வேண்டுமென்று உணர்ச்சி கொண்ட பூதத்தையும் விரட்டியடிக்க வேண்டுமென்றார்.

இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்கும் இடையே யுத்தம் என்ற பேச்சு அர்த்தமற்றதென்றார்.

தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர்

சென்னை, அக். 3

காந்திஜியின் 79-வது பிறந்த தினக் கொண்டாட்டம் சம்பந்தமாக நேற்று மாலை திலகர் கட்டிடத்தில் நடந்த ஒருபெருங் கூட்டத்தில் காங்கிரஸ், கமியூனிஸ்டு தலைவர்களெல்லோரும் மகாத்மாவின் மாபெரும் தேவையைப் பாராட்டிப் பேசினார்கள்.

"மகாத்மா காந்தியைப்போல தீவிர சோஷலிஸ்டுவாதி எவருமில்லை. மகாத்மாவின் அடுத்த பிறந்தினத்துக்குள் நாம் இந்நாட்டில் எல்லாவித சுரண்டல்களையும் ஒழித்து சமதர்ம ஆட்சியை நிலைநாட்டவேண்டும்" என்று த. நா. கா. க. தலைவர் ஸ்ரீ காமராஜ் நாடார் கூறினார்.

ஆசியாவின் பொருளாதார அபிவிருத்தி

இந்தியா பிரதிநிதியின் எச்சரிக்கை

நியூயார்க், அக். 3

ஐக்கியதேச பொருளாதாரக் கமிட்டியில் இந்தியா பிரதிநிதி பேத்தா பேசியபோது பின் வருமாறு தெரிவித்தார்:-

கைத்தொழில் அபிவிருத்தியடைந்துள்ள அமெரிக்காவையும் ஐரோப்பாவையும் முன்னணியில் வைத்துக்கொண்டு உலகப் பொருளாதார நிலைமையைப் பரிசீலனை செய்வது சுத்தப் பிசகு நிபுணர்கள் இந்தத் தவறான வழியைப் பின்பற்றி பரிசீலனை செயய ஆரம்பித்திருக்கிறார்கள் கைத்தொழிலில் பிற்போக்கிலிருக்கும் ஏனைய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்தியடைந்தால்தான் உலகப் பொருளாதார நிலைமை சீர்திருந்தும் என்ற உண்மையை இவர்கள் மனதிலிருத்திக் கொள்ள வேண்டும்

பிற்போக்கான நாடுகளில் கைத்தொழில் அபிவிருத்தி செய்வதற்கு ஏராளமான சாதகமான நிலைமைகளிருக்கின்றன. அதற்கு உதாரணம் இந்தியாவாகும். இந்நாடுகளுக்கு தங்கள் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கு வசதிகள் அளிக்க வேண்டியது முக்கியமான கடமையாகும் (ராய்ட்டர்)

ராஷ்டிரபதி பிரசங்கம்

புதுடில்லி, அக். 2

சுதந்திரப் பிரச்னைக்கு அஹிம்ஸை மூலம் பரிகாரம் தேடியதுபோல் வகுப்புப் பிரச்னையையும் அஹிம்ஸை மூலம் தீர்க்க காந்திஜி கூறும் யோசனையை விளக்கி அகில ரேடியோவில் ராஷ்டிரபதி கிருபளானி பேசினார்.

பம்பாயில்

பம்பாய், அக். 2

பம்பாயில் எல்லா வகுப்பினரும் காந்தி ஜெயந்தியைக் கொண்டாடினார்கள். ஜின்னா மண்டபத்தில மேயர் பேசிய போது காந்திஜி ஒரு கர்மயோகி என்று தெரிவித்தார். பம்பாய் மேற்றிராணியார், பம்பாய் முஸ்லிம் லீக் தலைவர் முதலியோர் பேசினார்கள். இன்றைய கொண்டாட்டத்தில் ஹிந்து - முஸ்லிம் ஐக்கியம் சம்பூரணமாக இருந்தது.

இந்தியாவின் பிரபல சினிமா நடிகர்களும், பிரபல எழுத்தாளர்களும் 10 லொறிகளில ஏறி ஏராளமான ஜனத்திரளுடன் ஊர்வலமாக பொதுக் கூட்டத்திற்கு வந்தார்கள். இந்த ஊர்வலத்தில் 17 அரசியல் ஸ்தாபனங்கள் கலந்திருந்தன.

ராஜாஜி

கல்கத்தா, அக் 2

காந்தி ஜெயந்தி கொண்டாட்டம் சம்பந்தமாக கல்கத்தாவில் நடந்த ஒரு கூட்டத்தில் ராஜாஜி பேசுகையில் இந்தப் பயங்கர காரிருளிடையே காந்திஜியின் ஒளி சுடர்விட்டுப் பிரகாசிக்கிறதென்றார்.

பழிவாங்க வேண்டுமென்று உணர்ச்சி கொண்ட பூதத்தையும் விரட்டியடிக்க வேண்டுமென்றார்.

இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்கும் இடையே யுத்தம் என்ற பேச்சு அர்த்தமற்றதென்றார்.

தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர்

சென்னை, அக். 3

காந்திஜியின் 79-வது பிறந்த தினக் கொண்டாட்டம் சம்பந்தமாக நேற்று மாலை திலகர் கட்டிடத்தில் நடந்த ஒருபெருங் கூட்டத்தில் காங்கிரஸ், கமியூனிஸ்டு தலைவர்களெல்லோரும் மகாத்மாவின் மாபெரும் தேவையைப் பாராட்டிப் பேசினார்கள்.

"மகாத்மா காந்தியைப்போல தீவிர சோஷலிஸ்டுவாதி எவருமில்லை. மகாத்மாவின் அடுத்த பிறந்தினத்துக்குள் நாம் இந்நாட்டில் எல்லாவித சுரண்டல்களையும் ஒழித்து சமதர்ம ஆட்சியை நிலைநாட்டவேண்டும்" என்று த. நா. கா. க. தலைவர் ஸ்ரீ காமராஜ் நாடார் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூச்சுத்திணறும் பாரசீகம்

அமெரிக்கா, பிரிட்டன் ஆதிக்கம்

இந்தமகா சமுத்திரத்தில் மூச்சுவிட வழி

டெஹ்ரான், அக் 2

இன்று பாரசீக பார்லிமெண்டில் ஹமதான் பிரதிநிதி எஸ். கண்டாரி பின்வருமாறு தெரிவித்தார்:-

பாஹ்ரீன் தீவில் ராணுவக் கோட்டை அமைக்க பாரசீக சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும். பாரசீக வளைகுடாக் கடலில் அந்த இடம் பாதுகாப்புக்கு முக்கியமானது. பாஹ்ரீன் தீபகற்பம் இப்பொழுது பிரிட்டிஷ் பாதுகாப்புப் பிரதேசமாகஇருக்கிறது அதில் மத்திய கிழக்கு நாடுகளில் கிடைக்கும் ஆயிலைவிட அதிகமான ஆயில் கிடைக்கும். பிரிட்டிஷ் அமெரிக்க ஆயில் கம்பெனிகள் 1949-வது வருடத்திற்குள் இரண்டரைக் கோடி பவுண் செலவில் பாஹ்ரீனிலிருந்து சில மைல் தூரம் மேற்கிலுள்ள சுஊதி அரேபியா கடற்கரையிலுள்ள டெஹ்ரான் துறைமுகம்வரை அராபிய நாடுகளை ஊடுருவிச் செல்லும் ஆயில் குழாய் பாதை அமைக்க ஏற்பாடு செய்திருக்கின்றன இந்து மகா சமுத்திரத்திலும் ஓமான் கடலிலும் பாரசீகம் மூச்சுவிட வேண்டுமானால் இப்பிரதேசங்களில் பாரசீக சர்க்கார் தங்கள் பலத்தையும் பாதுகாப்பையும் நிறுவ முயற்சிக்கவேண்டும். பாரசீகத்திலுள்ள ஆங்கிலோ - பாரசீக ஆயில் கம்பெனியிலும் பாரசீக இம்பீரியல் பாங்கிலும் பிரிட்டனுக்குள்ள சலுகை ஒழிந்தால் தான் பாரசீகத்தின் சுதந்திரம் நிலைநிற்கும்.

(ராய்ட்டர்)

நரம்புத் தளர்ச்சி

நீங்கள் பலவீனமடைந்து விட்டீர்களா?

உங்கள் வாழ்க்கையில் சந்தோஷமில்லையா?

அப்படியானால் நேரில் என்னைச் சந்தியுங்கள்.

உங்களுக்கு புத்துயிரையும், வீரியத்தையும், தைரியத்தையும் கொடுப்பேன்.

மூலவியாதி மூத்திரக் கோளாறுகள் முதலியவற்றிற்கு உத்தரவாதமுள்ள சிகிச்சை அளிக்கப்படும்.

பஸல் யூனானி டிஸ்பென்ஸரி,

எச். எப். இலாஹி எம். எஸ்.

353, டாம் ஸ்டிரீட்,

(கோர்ட் போஸ்டாபீஸ்முன்பாக)

கொழும்பு.

டெலிபோன்: 2816

யாழ்ப்பாணத்தில் தீண்டாமை வழக்கம்

ஒழிக்க முன்வரும் தமிழ் காங்கிரஸுக்குப் பாராட்டு

தாழ்த்தப்பட்ட மக்களின் கடமை

(மா. மு. பொன்னம்பலம்)

தீண்டாமை எனும் கொடுமையான மூடக் கொள்கை அநேக வருடங்களாக இந்நாட்டில் இருந்துவருகிறது. இதைத் திடீரென ஒழிப்பது முடியாத காரியம். இந்தியாவில உலகம் போற்றும் உத்தமர் மகாத்மாஜி பல வருடங்களுக்கு முன்னேயே தீண்டாமை எனும் கொடும் அரக்கனை ஒழிக்க நடவடிக்கை எடுத்து வந்தும் இன்னும் பூராகமுற்றுப் பெறவில்லை.

இலங்கையில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்த தீண்டாமை இருந்துவருகிறது அங்கும் தீண்டாமை எனும் கொடுமையை ஒழிக்க பெரும்பான்மைத் தமிழருள் பலர் விரும்பியும் முன்வந்து காரியங்கள் ஆற்ற அஞ்சுகின்றனர். ஏன்? மக்களிடை செல்வாக்குள்ள பலம் பொருந்திய ஒரு ஸ்தாபனம் முன்வராததாலேயே! இன்று பலம் பொருந்தியதும் எல்லா தமிழ் மக்களின் மதிப்பையும் பெறும் ஸ்தாபனமுமான அ. இ. தமிழ் காங்கிரஸ் இவ்விஷயமாக காரியங்கள் செய்ய முன்வந்திருப்பதானது தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்று எண்ணியிருந்தன்மை என்று சொல்லப்படு தீண்டாமையை ஒழித்து நாமும் மனிதரைபோல் என்று வாழ்வோம் என்று ஏங்கி இருந்த ஹரிஜன மக்களுக்கு இது பெரிதும் உற்சாகம் தருவதாய் இருக்கிறது யாழ்ப்பாணத்தில் உள்ள பெரும் பான்மைத் தமிழ்ப் பொது மக்கள் இனித்தான் மிக ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும் ஏன்? நமக்குள் பிரிவினையுண்டாக்கி தமிழாகிய நம்மை இழிவு செய்ய சிங்க சேனநாயக்கா கோஷ்டியினர் எவ்வளவு காரியம் செய்ய முடியுமோ அத்னையும் செய்வார்கள் ஆகவே நாம் நமக்குள் ஜாதிபேதம் பாராட்டலாகாது தீண்டாதான் என்பது யார்? தீண்டாதான் எல்லா ஜாதியிலும் உள்ளான். செட்டகுணம் உடையவர்களே தீண்டாதார்! நாம் தீண்டாதார் என்று சொல்லும் மக்களுள் எத்தனைபேர் மாமிசம் சாப்பிடாமல் நல்ல ஒழுக்க சீலர்களாய் இருக்கின்றனர். இவர்களை ஆலயத்துள் விடலாகாதென்கிறோம். ஜாதி ஹிந்து, அவன் நல்ல ஜாதியில் பிறந்தவன் என்று சொல்பவர்களுள். எத்தனைபேர் மாட்டிறைச்சி தின்கின்றார்கள். நிதமும் மது அருந்துகின்றார்கள் இன்னும் அசுத்தமான காரியங்கள் பல செய்கின்றார்கள். இவர்களை ஆலயத்துள் விடுகின்றோம்; ஆனால் ஹரிஜனங்கள் போனால், அருள்குன்றி விடும் என்கின்றோம். இது எவ்வளவு மூடக் கொள்கை? பெரியோரின் வழியை பின்பற்றுதல் வேண்டும் என்று நம் சமயத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. உலக மகான்கள் யாவரும் போற்றும் காந்தி அடிகள், எவ்வளவு முயற்சி செய்துள்ளார். இக்கொடிய நோயை அகற்றுதற்கு ஆகவே உண்மையை ஆர அமர யோசித்துத் தீண்டாமை ஒழிப்பு விஷயத்தில் பெரும்பான்மை மக்கள் உடன் முயற்சி எடுக்க வேண்டும்

யாழ்ப்பாணத்தில் உள்ள ஹரிஜன சோதரரும், வகுப்புவாதத்தில், ஆனந்தமாய் தோய்ந்து எழும் சிங்க சேனநாயக்கா கோஷ்டியினர்தான் நமக்கு உதவி செய்வார்கள் என்று நினைக்கலாகாது.

யாழ்ப்பாணத்தில் தீண்டாமையை ஒழிக்க விரும்பும் பெரும்பான்மை மக்களுடன் சேர்ந்து, தீண்டாமையை ஒழிக்க திட்டம் வகுத்து, அதை நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும். தமிழ்க்காங்கிரஸ் பாராளுமன்ற சபை, சென்ட சபை இரண்டிலும் ஹரிஜனங்களுக்கு இருஸ்தானங்கள் வேண்டும் என்று சொல்லி அதற்கு நடவடிக்கை எடுத்துவரும்போது அ. இ. சிறுபான்மைத் தமிழர் மகாசபை, அதைக் கண்டித்து பத்திரிகைகளில் எழுதுவது மிக வருந்தவேண்டிய விஷயமாக விளங்கின்றது. சிறுபான்மைத் தமிழர் மகாசபை யூ. என். பி. கட்சியை ஆதரித்ததால் சிறுபான்மை தமிழர் பெரும்பான்மை தமிழ் மக்களின் வெறுப்புக்குள்ளாகவேண்டி வந்தது. சில மாதங்களுக்கு முன்பு நடந்த அ. இ. சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் மகாநாட்டிற்கு 100 பேர்களாவது வராது போனதற்கு காரணம் யூ. என். பி. யையும் குறிக்க இரண்டொரு வரை பாராளுமன்றம், சென்டுக்கு அனுப்பியன்றதே நான் ஜாதியமுறையில் பெரும்பான்மை தமிழர் சமூகத்தைச் சேர்ந்தவனாயினும் தீண்டாமை ஒழிப்பு விஷயத்தில் அங்கு முயற்சி செய்து வந்ததனாலும் எனதருமை ஹரிஜன சகோதரர்களோடு கூடித் திரிந்ததாலும் இதை நான் தெரிந்து கொண்டேன். அதைத் தொடர்ந்து பின் ஒடுக்கப்படும் தமிழரின் ஊழியர் சங்கம் யூ. என். பி. கட்சியை ஆதரித்ததாக பத்திரிகைகளில் பார்த்தேன். இனிமேலாவது யூ. என். பி. கட்சி உறவைவிட்டு தமிழ் காங்கிரசுடனோ அல்லது வேறு கட்சிகளுடனோ சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும். ஹரிஜனங்களின் அநேகமாய் எல்லாரும் தொழிலாளரே ஐக்கிய தேசியக் கட்சி தொழிலாளரை அடக்கி ஆட்சி புரியப் பார்க்கின்றது என்பதை ஹரிஜன மக்கள் மறந்து விடலாகாது. அ. இ. தமிழ் காங்கிரசும், யாழ்ப்பாணத்தில் இன்று தீண்டாமை எனும் கொடுமையை ஒழிக்க ஒரு திட்டம் வகுத்து அதை கிரியாம்சத்தில் நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும். பெரும்பான்மை மக்களிடம் சென்று தீண்டாமையால வரும் கெடுதல்களை மக்களுக்கு அஹிம்சா முறையில் எடுத்துச் சொல்ல வேண்டும். அதன்பின் தீண்டாமையை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை அஹிம்சாமுறையில் எடுத்தல் வேண்டும். யாழ்ப்பாணத்தில் உள்ள ஹரிஜன மக்கள் மற்றவர்களுடன் ஒத்துழைக்க வேண்டும

மகாத்மா ஜெயந்தி

கண்டி, அக். 2

இன்று (2-10-47) பளைகலை தோட்டப் பாடசாலையில் மகாத்மா உருவப்பட அலங்காரத்துடன் காந்தி ஜெயந்தி தினவிழா கொண்டாடப்பட்டது. பிரஸ்தாப பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. கே. சின்னத துரை தலைமை வகித்தார். இனிய கீதங்களின் பின் தொடர்பாடசாலை ஆசிரியர் திரு. எம். எஸ். கிருஷ்ணன் "காந்தியின் தொண்டுகள்" என்ற விஷயம் பற்றி பேசினார். பின்னர் தலைவர் காந்தியின் வாழ்க்கை வரலாற்றைக் குறிப்பிட்டார்.

கொள்ளை லாபமடைய முயலும் வீட்டுக்காரர்கள்

பம்பாய் சர்க்காரின் கடுமையான நடவடிக்கை

பம்பாய், அக் 3

வீட்டுச் சொந்தக்காரர்கள் வீடுகளை வாடகைக்கு விடும்போது அதிகமாக முன் பணத்தைப் பெற்று கொள்ளை லாபமடிப்பதைத் தடுக்க பம்பாய் சர்க்கார் கடுமையான நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இப்பொழுதுள்ள வீட்டு வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை அதற்காகத் திருத்தியிருக்கிறார்கள். அதன்படி கொள்ளை லாபம் பெற விரும்பும் வீட்டுச் சொந்தக்காரருக்கு சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும் வீடுகட்டச் செலவழித்த மூலதனத்திற்கு சேத விகித வட்டி கிடைக்கு மளவுக்கு வீட்டு வாடகை கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஒழுங்காக வாடகை செலுத்துபவர்களை வீடடைவிட்டுக் காலிசெய்யும்படி சொல்ல வீட்டுச் சொந்தக்காரர்களால் முடியாது. சொந்தக்காரர்கள் தங்களுக்குக் குடியிருக்கவேண்டுமென்று கோரினால்தான் வீடடைக் காலிசெய்யச் சொல்ல முடியும். அதுவும் கோர்ட்டில் அனுமதி பெற்றபிறகே அப்படிச் செய்ய முடியும்.

இந்தியாவுக்கு ரஷியாவின் உரங்கள்

பம்பாய் வர்த்தகர் முயற்சி

மாஸ்கோ, அக். 3

உணவு தானியங்களும், விவசாயத்திற்கு உரங்களும் இந்தியாவுக்குத் தேவையிருப்பதால் அவைகளை ரஷியாவிலிருந்து இறக்குமதி செய்து இந்திய சர்க்காருக்கு உதவி புரியும் பொருட்டு சோவியத் ரஷியாவுக்குத் தனியாக தூதுசென்ற பம்பாய் பிரபல வர்த்தகர் திரு. ஆர். எம் நானாவதி பின்வருமாறு தெரிவித்தார்:- அடுத்த வருடம் முதல் ஆறுமாதங்களில் ரஷியா இந்தியாவுக்கு விவசாய உரங்கள் அனுப்பி வைக்க ஒப்புக்கொண்டிருக்கிறது. சோவியத் சர்க்காரின் ஏற்றுமதி இறக்குமதி ஸ்தாபனத்தின் அதிகாரிகளுடன் நான் சென்ற 12 தினங்களாக நடத்திய சம்பாஷணை வெற்றி பெற்றுள்ளது. ரஷியா இந்தியாவுக்கு எவ்வளவு உரங்கள் ஏற்றுமதி செய்யுமென்ற விபரத்தை இப்பொழுது தெரிவிக்க முடியாது. இவ்வருடக்கடைசியில் அது தெரியும். ஆனால் இப்பொழுது இந்தியாவிலுள்ள நிலைமையில் ரஷியா அனுப்பும் உரமும் மிகவும் உதவியாக இருக்கும்.

இந்தியாவில் திரு நானாவதியின் வர்த்தக கம்பெனி ஒன்று தான் ரஷியாவுடன் நேரடியான இறக்குமதி வர்த்தக சம்பந்தம் வைத்துக்கொண்டிருக்கிறது.

பசுக்கொலைக்குத் தடை

பர்மா சர்க்கார் சட்டம்

ரங்கூன், அக் 2

பர்மாவில் பசுக்களைக் கொல்லக் கூடாதென்று சர்க்கார் ஒரு சட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். கசாப்புக்கோ அல்லது மற்ற எதற்குமோ பசுவைக் கொல்லுகிறவர்களுக்கு 6 மாதம் சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.

பம்பாய் முஸ்லிம்கள் வேண்டுகோள்

பம்பாய், அக் 2

பக்ரீத் பண்டிகையன்று பசுக்களைக் கொல்ல வேண்டாமென்று பம்பாய் முஸ்லிம் பிரமுகர்கள் ஓர் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர். அதேபோன்று அகில இந்திய முஸ்லிம் காங்கிரஸ் வாதிகளும் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

ஐந்திய தேச அசெம்பிளி

பால்கன், தென்மேற்கு ஆப்பிரிக்கா, பாலஸ்தீன் பிரச்னைகள்

நியூயார்க், அக். 2

இன்று ஐக்கிய தேச அசெம்பிளி, பால்கன், தென்மேற்கு ஆப்பிரிக்கா, பாலஸ்தீன் ஆகிய மூன்று பிரச்னைகளைப் பற்றி விவாதிக்க மீண்டும் கூடியது

அரசியல் கமிட்டியில் கிரீஸ் பிரச்னை விவாதத்தில் பல்கேரிய பிரதிநிதி பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:-

அமெரிக்கா ஐக்கிய தேச ஸ்தாபனத்தைக் கருவியாகக் கொண்டு, பால்கன் நாடுகளிலும் சமீப கிழக்கு நாடுகளிலும் தன் விஸ்தரிப்புக் கொள்கையைப் புகுத்த முயல்கிறது. கிரேக்க கொரில்லாக்களுக்கு பல்கேரியா உதவிசெய்யவில்லை அமெரிக்காவின் தகவல்களையும் கிரேக்க சர்க்கார் பலவீனத்தையும் மறைக்கவேஎல்லைபுற சம்பவம் என்ற புகார் கிளப்பி விடப்பட்டிருக்கிறது இப்பொழுது இந்தோ-சைனா, இந்தோனேஷியா, பாலஸ்தீனம் ஆகியவிடங்களில் நடைபெறும் சம்பவங்கள் உலக சமாதானத்திற்கு ஆபத்தாகும். அப்படிப்பட்ட சம்பவம் பால்கனில் நிகழவில்லை. ஆதலால் இன்னுமோர் பால்கன் விசாரணைக்கமிஷன் நியமிப்பதால் மேலும் பல தொல்லைகளே ஏற்படும்.

தென்மேற்கு ஆப்பிரிக்காவை ஐக்கிய தேச தர்மகர்த்தா கமிட்டி நிர்வாகத்திற்குட்படுத்தும்படி தர்மகர்த்தா கமிட்டியில் இந்தியா பிரதிநிதி தனது தீர்மானத்தை வற்புறுத்துவார்.

சுய ஆட்சியில்லாத எல்லா நாடுகளையும் தர்மகர்த்தா கமிட்டி நிர்வாகத்திற் குட்படுத்தும்படி மற்றொரு தீர்மானத்தையும் கொண்டுவருவார்

தென்மேற்கு ஆப்பிரிக்காவை தர்மகர்த்தா கமிட்டி நிர்வாகத்திற்குக் கொண்டுவாராது தென்னாப்பிரிக்கா வாளாவிருந்து வருவதைக் கண்டித்தும் உடனே அவ்விதநிர்வாகத்திற்குக் கொண்டுவர ஏற்பாடுசெய்யும்படி டென்மார்க் பிரதிநிதி ஒரு தீர்மானம் கொண்டுவருவார்.

பாலஸ்தீன கமிட்டியில் யூதர் நிர்வாக சபை பிரதிநிதிபானஸ்லிவர் பேசியபோது விசாரணை கமிட்டியின் மெஜாரிடி அறிக்கைப்படி பாலஸ்தீனத்தைப் பிரித்து யூதர் சுதந்திர நாடு ஏற்படுத்த வேண்டுமென்று வற்புறுத்தினார்.

தகராறுகள் சமரசமாக தீர்க்கப்படும் சமயம் வல்லரசுகள் பாதுகாப்பு கவுன்ஸிலில் தங்கள் விசேஷ சலுகை வாக்கை உபயோகிக்கலாகாதென்று இன்று அரசியல் கமிட்டியில் சீனத்தின் பிரதிநிதி ஒரு தீர்மானத்தைத் தாக்கல் செய்திருக்கிறார்

(ராய்ட்டர்)

கனடாவுடன் நியூபவுண்டலாந்து இணைப்பு

அடுத்த வருஷம் நடைபெறலாம்

மாண்ட்ரீல், அக். 2

கனடாவுடன் நியூபவுண்ட்லாந்து சமீபத்தில் இணைக்கப்படலாம். ஆனால் இது அடுத்த வசந்த காலத்தில் நடக்கவிருக்கும் வாக்கெடுப்பின் முடிவைப் பொறுத்திருக்கிறது. இதுசாதகமாக முடியும் பட்சத்தில் 1948 முடியுமுன் நியூபவுண்ட்லாந்து ஓர் கனடிய மாகாணம் ஆகலாம் என நியூபவுண்ட்லாந்து தூதுக்கோஷ்டிக் காரியதர்சியான ஜோசப்ஸ் மால்லூட் இங்கு குறிப்பிட்டுள்ளார்.

(ராய்ட்டர்)

ஜனாதிபதி ட்ரூமன்-பிடால்ட் சந்திப்பு

வாஷிங்டன் அக் 3

பிரெஞ்சு வெளிநாட்டு மந்திரி பிடால்ட், ஜனாதிபதி ட்ரூமனை வெள்ளை மாளிகையில் பேட்டி கண்டு 25 நிமிஷங்கள்வரை சம்பாஷித்தார் அதன்பின் அவர் விடுத்த அறிக்கையில் அமெரிக்கப் பொருட்களை வாங்க போதிய டாலர் இல்லாத நிலையில் பிரான்ஸ் நவம்பர் முதல் கஷ்டத்தோடு சிக்கிவிடலாம் என்று எச்சரிக்கை செய்திருக்கிறார்.

அமெரிக்கர் யுத்த வெறியர்களா?

ரஷியாவுக்கு ஸ்ரீமதி ரூஸவெல்ட் சவால் விடுக்கிறார்.

நியூயார்க், அக் 2

ஐக்கிய தேச அசெம்பிளியில் ரஷிய பிரதிநிதி அமெரிக்கர்களை யுத்த வெறியர்கள் என்று குற்றஞ்சாட்டியதை நிரூபிக்கும்படி ஸ்ரீமதி ரூஸவெல்ட் ஒரு சவால் விடுத்திருக்கிறார். அசெம்பிளி கூட்டத்தில் ஸ்ரீமதி ரூஸ்வெல்ட் பதிலளிக்க உத்தேசித்திருக்கிறார் அதற்கிடையே ஞாயிற்றுக்கிழமை யன்று ரேடியோ பிரசாரத்தில் நடைபெறும் விவாதங்களில் தனக்கு பதில் சொல்ல முன்வரும்படி அவர் ரஷிய பிரதிநிதியையும்

ஆங்கிலோ-அமெரிக்க ரூர் திட்டம்

பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்து கண்டனம்

வாஷிங்டன், அக் 2

ரூர் நிலக்கரி சுரங்க நிர்வாகப் பொறுப்பை ஜெர்மானியர்களிடம் அதிகமாக ஒப்படைக்கும் ஆங்கிலோ-அமெரிக்கத் திட்டத்தைக் கண்டித்து பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்து ஆகிய நாடுகள் பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் கடிதங்கள் அனுப்பியிருக்கின்றன. (ராய்ட்டர்)

யூகோ அந்நிய நாட்டு மந்திரியையும் கூவி அழைத்திருக்கிறார். ஆனால் அவ்விரு வரிடமிருந்தும் அழைப்புக்கு யாதொரு விதமான பதிலுமில்லை.

குறைந்த விலை! குறைந்த விலை!!

6-ம் தேதி துவக்கம் 20-ம் தேதி வரைக்கும்

நாடோடி எழுதிய நூல்கள்

		பிரசுரவிலை	குறைக்கப்பட்டவிலை
1	பிழைக்கும் வழி	2-50	1 75
2	எங்கள் குடும்பம் பெரிது	2-50	1-75
3	அட பரமசிவா	3-00	2-00
4	படித்தபெண் வேண்டாம்	3-00	2-00
5	ஹே அநாதா	3-00	2-00

ஓடர் அனுபுவோர் தபாற்செலவு ஒரு புத்தகத்திற்கு 25 சதம் சேர்த்து போஸ்டல் ஓர்டராகவோ அல்லது மணியோர்டராகவோ அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும் வி பி இல்லை.

எஸ். எஸ். சண்முகநாதன் அன் சன்ஸ்.,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

எஸ். எஸ். சண்முகநாதன் அன் சன்ஸ்,
28, அப்பர் சதாம் ஸ்டிரீட். கொழும்பு 1

கட்டிட வேலைக்கு வேண்டிய எல்லா விதமான சாமான்களும் குறைந்த விலையில் கிடைக்கும் இடம்

செட்டிநாட் கார்ப்பொரேஷன் லிமிடட்
116/118 கெய்சர் வீதி,
கொழும்பு.

- சிமந்தி: (இங்கிலீஷ் & பெல்ஜியம்)
- கை வாளிகள்: 7 அங்குலம் துவக்கம் 14 அங்குலவரைக்கும்.
- வார்னிஷ்: இங்கிலீஷ் & இந்தியன்.
- ஜன்னல் கண்ணாடிகள்:
- தீந்தைகள்: 28 ரூத்தல் தகர டின்களில் அடைக்கப்பட்டது நிறம்: பச்சை, தேக்கு, சொக்கலட் நிறங்களில்.
- முள்ளுக் கம்பி.
- பித்தளை, இரும்பு, ஸ்குருப் ஆணிகள்.
- இரும்பு கூரைத் தகடுகள்: 9'X3'X24 G

இன்னும் வேண்டிய கட்டிடச் சாமான் முதலியவைகளுக்கு, கடிதமூலமாகவும் நேரிலும் விசாரித்துக்கொள்ளலாம்.

மெஸ்க்கன் ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ்,
165, ஆர்மர் வீதி, கொழும்பு.

தெ-போன்:- 4461. தந்தி விலாசம்: "மெஸ்க்கன்"
தபால் பெட்டி 826.

நவீன முறையில் தயார் செய்யப்பட்ட



சந்திரா பீடியை வாங்கி உபயோகியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை

வவுனியா விளைபொருள் விற்பனவு ஐக்கிய சங்கம்

வவுனியா தெற்கு, விளைபொருள் விற்பனவு ஐக்கிய சங்கத்தால் நடாத்தப்படும் அரிசி ஆலைக்கு ஓர் மனேஜர் தேவை.

சம்பளம் மாதமொன்றுக்கு ரூபா 100. ரொக்கப்பிணை ரூபா 2,000. விண்ணப்பம் செய்வோர் ஆங்கிலம் பேசவும் எழுதவும் தெரிந்தவராக இருத்தல் வேண்டும். மனுப் பத்திரங்கள் மூன்று, நற்சாட்சிப் பத்திரங்களுடன் மேற்படி சபைக் கௌரவ காரியதரிசி அவர்கட்கு 15-10-47 க்குமுன் அனுப்பப்படல் வேண்டும்

இ. வ. கெங்காஇரத்தினம்
கௌரவ காரியதரிசி,
வவுனியா
2-10-47.

பணத்திற்காகக் கொலை செய்தான்

பணம் கிடைக்கவில்லை; சாவு கிடைத்தது

வட்டகொடைக் கொலை வழக்கில் தீர்ப்பு

கண்டி, அக். 3

கம்பளைப் போலீஸ் வட்டாரத்தில் உள்ள வட்டகொடை வத்தை தோட்டத் துரை செனிவிரத்ன பண்டார அமுனுகம என்பவரையும் அவரது 15 வயது வேலைக்காரப் பையனையும் கொன்றதாகத் தொடரப்பட்ட வழக்கில் முதலாம் எதிரி உக்குதுரைய என்னும் டிக்கிரிதுரையவுக்கு கண்டி அசைஸ் கோர்ட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி வழக்கில் உக்குதுரையவும், எல். ஏ. அப்புஹாமியும் சென்ற வருஷம் பெப்ரவரி 12-ம் தேதி இரவு திரு. அமுனுகமவின் பங்களாவில் புகுந்து அவரையும், அவரது வேலைக்காரனையும் சாகும்படி அடித்து அங்கிருந்த சில பொருட்களையும், ஓர் துப்பாக்கியையும் எடுத்துச் சென்றதாகக் குற்றம் சாட்டப்பட்டனர்.

விசாரணையின்போது மேற்படி செயலுக்குக் காரணம் தோட்டத் துரையிடம் தொழிலாளரின் சம்பளப் பணமும் ஓர் கார் விற்ற பணமுமாக பெருந் தொகைக் காசு இருப்பதாக மேற்படி இருவராலும் எண்ணப்பட்டதே என்றும் ஆனால் எவ்வித பணமும் அன்றிரவு பங்களாவில் காணப்படவில்லை என்றும் தெரியவந்தது

காலையில் தொழிலாளர் வேலைக்கு வந்தபோது கதவுகள் பூட்டிக்கிடக்கக் காணப்பட்டது. ஒரு கங்காணி உள்ளே புகுந்து பார்த்தபோது இரு சடலங்களும் மிகக் குரூரமான அடி காயங்களுடன் காணப்பட்டன.

விசாரணை முடிவில் இரண்டாவது எதிரி அப்புஹாமி விடுதலை செய்யப்பட்டார்.

டச்சு ராணி தேக அசௌக்கியம்

மகளுக்கு சிம்மாசனம்

ஹேக், அக். 3

ஹாலந்து ராணி வில்ஹெல்மினா தேக அசௌக்கியமுற்றிருப்பதால் அவர் கூடிய சீகிரம் சிம்மாசனத்திலிருந்து விலகுவார். அவருக்குப் பதில் அவரது புத்திரியான இளவரசி ஜூலியானா சிம்மாசனமேறுவார். டச்சு பார்லிமெண்டில் இரு சபைகளிலும் இதற்கு சம்மதமாக சட்டம் நிறைவேற்றப்பட்டது. இளவரசி ஜூலியானா சிம்மாசனத்தில் ஏறுவார்.

ராணி வில்ஹெல்மினாவுக்கு 67 வயதாகிறது. 1890-வது வருடம் அவரது தந்தை இறந்ததும் தனது 10-வது வயதில் வில்ஹெல்மினா ராணியானார். 1898-வது வருடம் அவருக்கு 18 வயது ஆகும்வரை அவரது தாயார் பிரதிநிதியாக இருந்து ஆட்சியை நடத்தி வந்தார். 1901 வது வருடம் வில்ஹெல்மினாவுக்குக் கலியாணமாயிற்று. அவருக்கு ஒரே ஒரு புத்திரி ஜூலியானா 1909 வது வருடம் பிறந்தார். இளவரசி ஜூலியானா 1937 வது வருடம் கலியாணம்செய்து 4 பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்தார். (ராய்ட்டர்)

எந்த நிலைமைக்கும் தயாராக இந்திய சர்க்கார் ஏற்பாடு

விசேஷ தற்காப்பு கமிட்டி நியமிக்கப் படலாம்

புதுடில்லி, அக் 2

மந்திரிகள் அடங்கிய தற்காப்பு கமிட்டி யொன்றை அமைக்க இந்திய சர்க்கார் உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது. இதில் பிரதம மந்திரி, டெபுடி பிரதம மந்திரி, தற்காப்பு மந்திரி, நிதி மந்திரி ஆகியோர் இருப்பார்கள்.

ராணுவத்தை இந்தியமயமாக்குவதும் தேசத்தை எந்த நிலைமைக்கும் தயார் செய்வதுமே தற்காப்பு விஷயங்களுக்காக மந்திரிக ளடங்கிய கமிட்டி யமைப்பதின் முக்கிய நோக்கம் எனத் தெரிகிறது.

பாக்கிஸ்தானின் தந்திரங்களுக்கெதிராக அபிப்பிராயம் உறுதிப்பட்டு வருகிறது. கூட்டாக கலந்தாலோசித்தபோது செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைகளை பாக்கிஸ்தான் கௌரவிக்கவில்லை உலகின் முன்பும் காமன் வெல்த் நாடுகளின் முன்பும் தான் ஒரு குற்றமும் செய்யாதது போல அது வேஷம்போடுகிறது இம்மாதிரி தந்திரங்களுக் கெதிராக அபிப்பிராயம் பலப்படுகிறது

மந்திரி சபையில் சேர்ந்தது முதல் காங்கிரஸ் அல்லது ஹிந்துக்களை விட லீகின் கட்சியை அதிகமாக ஆதரித்து வந்த ஒரு முஸ்லிமல்லாத மெம்பர் லண்டனுக்கு லியாகத் காவடி யெடுத்ததின் தமது அபிப்பிராயத்தை அடியோடு மாற்றிக் கொண்டு விட்டார்.

பாக்கிஸ்தான் படை திரட்டுகிறதா?

கராச்சி, அக். 2

பாக்கிஸ்தான் ராணுவத் தலைமைக் காரியாலயத்தினர் 75 000 மாஜி சோல்ஜர்களைத் திருப்ப ராணுவத்தில் சேரும்படி உத்தரவிட்டிருப்பதாக வெளியான செய்திகள் உண்மையல்லவென்று பாக்கிஸ்தான் சர்க்காரின் செக்ரட்டரி ஜெனரல் ஸ்ரீ ஜனுப் முஹம்மது அலி மறுக்கிறார்.

பாக்கிஸ்தான் ரேடியோவின் பயமுறுத்தல்

புதுடில்லி, அக். 3

காஷ்மீர் சமஸ்தானத்தை சில வாரங்களாக பாக்கிஸ்தான் ரேடியோ பயமுறுத்திக் கொண்டே இருப்பதாக பெஷாவாரிலிருந்து வந்த அகதியொருவர் கூறுவதாக "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" செய்தி பிரசுரித்திருக்கிறது.

காஷ்மீரதில் எல்லைப்புற மேற்குப் பஞ்சாப் ஹிந்து, சீக்கிய அகதிகளுக்குப் புகலிட மளிப்பதைக் குறித்து பாக்கிஸ்தான் ரேடியோ ஆட்சேபக்கிறது. காஷ்மீரத்தின் நிலைமை பற்றி மலைஜாதிகள் பரபரப்படைந்திருப்பதாக ரேடியோ கூறுகிறது. காஷ்மீர் சமஸ்தானத்தில் கிளர்ச்சியைக் கிளப்பி விடுவதற்காக நாசூக்கான பிரசாரம் இது. அதன் பின் ஆழ்ந்த சதியாலோசனை இருக்கக்கூடும்.

பாக்கிஸ்தானில் ராணுவப் பயிற்சி

கராச்சி அக். 3

சிந்து சர்க்கார் அபிவிருத்தி ஆலோசகரான கஸதார் இன்று கீழ்க்கண்ட ஆலோசனை விடுத்திருக்கிறார்:- பாக்கிஸ்தான் சர்க்கார் 18 வயதுக்குமேல் 50 வயதுக்குட்பட்ட ஒவ்வொரு முஸலிமுக்கும் ராணுவப் பயிற்சி அளிக்க வேண்டும். யுத்தசேவைகளுக்கு பெண்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். இரண்டு மாதங்களுக்குள் இப்பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். படை திரட்டுவதே பாக்கிஸ்தானின் முக்கியகுறிக்கோளாக இருக்கவேண்டும்.

ஜனுப் கஸதார் அகில இந்திய முஸலிம்லீக்கவுன்ஸிலிலும் ஒரு அங்கத்தினர் மாஜி சிந்து சர்க்காரில் மந்திரியாக இருந்தவர்.

அமெரிக்காவில் பாக்கிஸ்தான் ஸதானிகர்

நியூயார்க், அக் 3

பாக்கிஸ்தான் ஸதானிகர் இஸபஹானி இன்று அமெரிக்க ஆக்டிங் அந்நிய நாட்டு மந்திரி லோவட்டைச் சந்தித்து தனது அத்தாட்சிப் பத்திரத்தை வழங்கினார். அவர் வெள்ளை மாளிகையில் அமெரிக்க குடியரசுத் தலைவர் ட்ரூமனைச் சந்திப்பார்.

குற்றச்சாட்டு

மனித வர்க்கத்தைப் பூண்டறுக்கும் சதி ஒழிப்புக் கமிட்டியில் இன்று பாக்கிஸ்தான் ஸதானிகர் பேசியபோது, இந்தியாவிலுள்ள அதிகாரிகள் மீது குற்றஞ் சாட்டினார். அவர்கள் மதத்துவேஷத்தின் காரணமாக இந்தியாவிலுள்ள முஸலிம்களை அழிப்பதாகததெரிவித்தார். இந்தக் குற்றச்சாட்டு அபாண்டமானதென்றும் முற்றிலும் பொய் என்றும் இந்தியா சட்டநிபுணர் லால் பதலளித்தார். கமிட்டித்தலைவரான சிரியா பிரதிநிதி பின்வருமாறு முடிவு தெரிவித்தார்:-

இந்த சம்பவத்தை இரு தரப்பாரும் மறந்துவிடுங்கள் இந்த துக்ககரமான செயலைநிறுத்தும்படி இரு பிரதிநிதிகளும் தத்தம் நாட்டு மக்களுக்குச் சொல்லுங்கள்.

சீன உள் நாட்டு யுத்தம்

வெய்ஹெய்வெய் துறைமுகம் தாக்கப்படுகிறது

நான்கிங், அக். 3

மூக்டன் ரயில்வே ஸ்டேஷனுக்கருகே கமியூனிஸடு துருப்புகள் அகப்படுக் கொண்டு அங்கு தீவிரமான போராட்டம் நடைபெறுவதால், முன்னர் பிரிட்டிஷார் குத்தகைக்கு கொடுத்திருந்த ஷாண்டங் தீப கற்பத்திலுள்ள வெய்ஹெய்வெய் துறைமுகததை சீன சர்க்கார் யுத்தக் கப்பல்கள் தாக்கின இரண்டு தினங்களுக்கு முன் சீன சர்க்கார் துருப்புகள் செபு துறைமுகத்தைக் கைப்பற்றி அங்கிருந்து வென்டென் நகர் நோக்கிச் செல்லுகின்றன.

(ராய்ட்டர்)

வருமான வருவாயில் வீழ்ச்சி

11 மாதப் புள்ளி விபரங்கள்

கொழும்பு, அக். 5

1946 அக்டோபர் தொடக்கம் 1947 ஆகஸ்ட் வரையும் உள்ள 11 மாத பொருளாதார வருமானப் புள்ளி விபரங்களை பொக்கிஷ இலாகா உதவிக் காரியதரிசி திரு. ரி. டி. பெரேரா வெளியிடடுள்ளார்.

அதில் முக்கியமான அம்சங்கள் பின்வருமாறு: 1945-1946 வருடத்திலும் பார்க்க அதிக வருமானம் 155 லட்சம் ரூபாய் குறைந்து போய்விட்டது. இப்பொருளாதார வருடத்தின் மதிப்பு வருமானமான 417,869,000 ரூபாய் இன்னும் அடையப் பெறவில்லை. ஆக 400,401,777 ரூபாயே அடையப்பட்டிருக்கிறது. ஆகவே 175 லட்சம் ரூபாய் இன்னும் சேகரிக்கப்படவேண்டி இருக்கிறது. கலால், துறைமுக, தபால் இலாகா வருமானங்கள் மட்டும் எதிர்பார்த்ததிலும் சற்று அதிகமாகக் கிடைத்துள்ளது. வருமான வரி 30 லட்ச ரூபாய் குறைந்து போய் விட்டதாகவும் மேற்படி அறிக்கையில் இருந்து தெரிகிறது.

கிரவுன்

தியேட்டர்
ஸ்கின்னர்ஸ் ரோட்
மருதானை

இப்பொழுது தினசரி மாலை 6-15 மணிக்கும், இரவு 9-30 மணிக்கும், சனி ஞாயிறு மெட்னி 3 மணிக்கு.

சித்ரகலா தயாரித்த உன்னத தமிழ் படம்!

தாய் நாடு

மகத்தான 3-ம் வாரம்

அடக்கு முறைகளுக்கு ஆட்பட்டிருந்த மக்களின் மீட்சிக்காகவும் தாய்நாட்டின் விடுதலைக்காகவும் நடக்கும் போராட்டங்களைக் கொண்டது

மெட்ரூஸ மெயிக் புகழ் பாட்லிங் மணியும் புதிய நடிகை சுந்தரியும் மற்றும் பலரும் சிறப்புடன் நடித்தது

பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் மெட்னியில் பெல்கானிக்கு அரைசார்ஜ் எடுக்கப்படும்

சித்ரகலாவின்
தாய் நாடு
(தமிழ்)
டைரக்ஷன்
T.S.மணி

ஸ்டுடியோ: சித்ரகலா, மதுரை.

பாசிஸத்திற் கிடங் கொடாதீர்

ஹிந்துக்களுக்கு பண்டிதநேரு எச்சரிக்கை

சையது அலி ஸாஹிர் பாரசீகத்தில் இந்திய ஸ்தானாதிபதி

புதுடில்லி, அக். 3

இன்றிரவு பண்டித நேரு பேசியபொழுது பின்வருமாறு தெரிவித்தார்;-

இந்தியாவில் இப்பொழுது பாசிஸ அலை மோதுகிறது. வருடக் கணக்காக முஸலிம லீக் முஸலிமல்லாதார் மீது செய்துவந்த துவேஷப் பிரசாரத்தின் எதிரொலிபாக இந்த அலை கிளம்பியிருக்கிறது நாஜிகளிடமிருந்து முஸ்லிம் லீக் கடன் வாங்கிய இந்த துவேஷப் பிரசாரக் கொள்கைகள் இப்பொழுது ஹிந்துக்களிடையேயும் பரவி வருகிறது அதன் காரணமாகவே இப்பொழுது இந்தியா ஹிந்து அரசாங்கமாக இருக்க வேண்டுமென்ற உணர்ச்சி எழுந்திருக்கிறது. இந்தியாவிலுள்ள முஸலிம்கள் தங்கள் தாய்நாட்டுக்குத் துரோகம் செய்வார்களேயாகில் அவர்களைத் தண்டிக்க இந்திய சர்க்கார் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களை அதற்காக மற்றநாடுகளில் போய் குடியேற வெளியே துரத்துவதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. தாய் நாட்டின் மீது விசுவாசமுள்ள முஸலிம்களுக்கு எவரும் எவ்விதமான இடைஞ்சலும் செய்யலாகாது.

லார்டு இஸமே லண்டன் பயணம்

கராச்சி, அக். 3

இந்தியா கவர்னர் ஜெனரல் லார்டு மவுண்ட் பேட்டனின் பிரதம ஆலோசகரான லார்டு இஸமே இன்று தனது புத்திரியுடன் பிரத்தியேகவிமானதில் இங்கு வருகிறார். நாளை அவர் இங்கிருந்து லண்டனுக்குப் பயணமாவார். இந்திய நிலைமை பற்றி அவர் பிரிட்டிஷ் மந்திரி சபைக்கு தகவல் தெரிவிப்பார்.

உணவுப் பிரதிநிதி

லண்டன், அக். 3

ஜினிவாவில் நடைபெற்ற உலக உணவு விவசாய மகாநாட்டுக்கு இந்தியாவின் பிரதிநிதியாக வந்திருந்த திரு. ஏ. என். சின்ஹா பிரான்ஸ, ஜெர்மனி, டென்மார்க், செக்கோஸலவகியா முதலிய பல ஐரோப்பிய நாடுகளைச் சுற்றிப் பார்த்து விட்டு இங்குவந்து இன்று விமானமார்க்கமாக டில்லிக்குப் பயணமானார்.

பாரசீகத்துக்கு இந்திய ஸ்தானாதிபதி

புதுடில்லி, அக். 3

ஜனுப் சையது அலி ஸாஹிர் பாரசீகத்திற்கு இந்தியாவின் ஸதானாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் ஷீயா முஸ்லிம் வகுப்பைச் சேர்ந்தவர். சென்ற வருடம் பாரசீகத்தில் பிரிட்டன் வைத்திருந்த இந்திய துருப்புகளை வாபீசெய்ய வேண்டுமென்று கோரியவர்.

பட்டமளிப்பு விழா பிரசங்கம்

அக்டோபர் 17-ந் தேதி நடைபெறும்

கொழும்பு, அக். 5

இலங்கை சர்வ கலாசாலை பட்டமளிப்பு விழா அக்டோபர் 17-ம் தேதி நடைபெறும். பிரதம மந்திரி திரு டி எஸ் சேனநாயக்கா பட்டமளிப்பு விழாப் பிரசங்கம் செய்வார்.

இடைக்கால சர்க்காரில் போக்குவரத்து மந்திரியாக இருந்தவர். லக்னோவாசி. பாரசீகத்தில் இவர் இந்திய சர்க்காரின் முதலாவது ஸதானாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பர்மா பிரதமருக்கு பண்டித நேரு அழைப்பு

ரங்கூன், அக். 3

புதிய ஆங்கிலோ-பர்மிய உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட பர்மா பிரதம மந்திரி தக்கின் நூ அக்டோபர் 12-ம் தேதி லண்டனுக்குப் பயணமாகிறார். அக்டோபர் கடைசியில் அவர் லண்டனிலிருந்து பர்மா திரும்புமபோது புதுடில்லிக்கு விஜயம் செய்வார். புதுடில்லிக்கு விஜயம் செய்யும்படி இந்திய பிரதம மந்திரி பண்டித நேரு பர்மா பிரதம மந்திரி தக்கின் நூவை அழைத்திருக்கிறார்.

இந்தியாவுக்கு ஆஸதிரேலிய உணவு

லண்டன், அக் 3

மெல்போர்ன் ரேடியோதெரிவிப்பதாவது:- பிரிட்டனுக்கு ஆஸதிரேலியா அனுப்பவிருக்கும் உணவு தானியத்தின் ஒரு பகுதியை இந்தியாவில் உணவு நெருக்கடி அதிகமாயிருப்பதால் அங்கு அனுப்பிவைக்கும்படி பிரிட்டன் ஆலோசனை கூறியுள்ளது. இந்திய சர்க்காரும் அதிக உணவு தான்யம் அனுப்பும்படி ஆஸதிரேலியாவைக்கேட்டிருக்கிறது. இன்னும் பிரான்சும், தென்னாப்பிரிக்காவும் மற்றும் பல நாடுகளும் தங்களுக்கு உணவு தான்யம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றன. இவைகளுக்கு எல்லாம் எவ்வளவு அனுப்பிவைப்பதென்பதை ஆஸதிரேலிய சர்க்கார் தீர்மானம் செய்ய இன்னும் சில வாரங்களாகும்.

பம்பாய் வேலை நிறுத்த முடிவு

பம்பாய், அக், 3

11 தினங்களாக பம்பாயில் கெருக்கடியை உண்டுபண்ணிய நெசவாலைத் தொழிலாளர்வேலை நிறுத்தம் முடிந்து விட்டது. இதற்குக் காரணமாக இருந்த 3500 தொழிலாளர்களும் வேலைக்குத் திரும்பினர்

பிரிட்டனின் இந்தியா கடன் பத்திரங்கள்

லண்டன், அக் 3

1948 அக்டோபர் 5-ம் தேதி திருப்பிக்கொடுப்பதாக பிரிட்டன் இந்தியாவில் எழுப்பிய 3 பவுண் வட்டிக் கடன் பத்திரங்களுக்கு குறிப்பிட்ட தேதியில் இங்கிலாந்து பாங்க் மூலமாக பணம் திருப்பிக் கொடுக்கப்படும் என்று பிரிட்டிஷ் சாம்ராஜ்ய உறவு மந்திரி காரியாலய அறிக்கை தெரிவிக்கிறது.

முஸ்லிம் பெண்ணின் விவாக ரத்துக் கோரிக்கை

வழக்கு மீண்டும் விசாரிக்க உத்தரவு

கொழும்பு, அக். 3

அலுத்கமையைச் சேர்ந்த மஹ்மூத் மரைக்கார் நூருல் நஸீபா என்னும் முஸலிம் மாது தனது கணவனான முஹம்மது இஸமாயில் ஹமீத் மரைக்கார் ஹாஜியாரிடம் இருந்து விவாக ரத்து கோரி தொடாந்த வழக்கு வியாழக்கிழமை அப்பீல் கோர்ட்டில நீதியரசர்கள் கனகரத்ன, டயஸ் என்பவர்களால் விசாரிக்கப்பட்டது.

மேற்படி வழக்கில் குறித்த முஸ்லிம் மாது தன் கணவனுக்குக் குஷ்டரோகம் இருப்பதாக ஒரு காரணத்தையும் கூலா விவாகரத்து முறைப்படி முஸலிம் சட்டத்தில ஒரு பெண் எவ்வித காரணமும் காட்டாமலே கணவனுக்கு நஷ்ட ஈட்டுப் பணம் கொடுத்து விவாக ரத்து பெறலாம் என்ற காரணததையும காட்டி விவாக ரத்துக் கோரியுள்ளார்.

இவ்வழக்கு களந்துறை கோர்ட்டில் தொடரப்பட்ட பொழுது களுத்துறை நீதிபதி திரு. சன்ஸோனி சட்டப்பிரகாரம் முஸ்லிம் விவாக ரத்துகள் டிஸ்டிரிக்ட் கோர்ட்டின் அதிகாரத்திற்குப் புறம்பானது என்று கூறி வழக்கைச்செலவுக் காசின்றி தள்ளுபடி செய்து விட்டார்.

நீதியரசர் கனகரத்ன தமது தீர்ப்பில் குறிப்பிட்டதாவது:-

1938 டிசம்பர் 28ல் திருமணம் நடைபெற்றிருக்கிறது. சிறிது நாட்கழித்து தன் கணவனுக்குக் குஷ்ட ரோகம் இருப்பதை பெண் கண்டுபிடித்திருப்பதாகத் தெரிகிறது. இதன் பயனாக 1945 பிற்பகுதியில் அவள் வேறாகத் தனித்து வாழ ஆரம்பித்திருக்கிறாள்.

இப்போது நாம் தீர்ப்பளிக்க வேண்டியது ஒரு முஸலிம் நபர் லிவில்கோர்ட்டில விவாகரத்து வழக்குத் தொடரலாமா என்பதே.

நீண்ட சர்ச்சைக்குப் பின்னர் சம்மதம் இல்லாமல் செய்யப்பட்ட மணம் காரணமாகவும் மணததிற்குப் பின்னால் கண்டுபிடிக்கப்பட்ட தேக கோளாறுகள் காரணமாகவும், கணவனின் பைதியம் அல்லது குஷ்டம்காரணமாகவும் அப்படி வழக்குத் தொடரலாம் என்று நீதி அரசர் அபிப்பிராயப்பட்டார்.

எனவே வழக்கு மீண்டும் டிஸ்ரிக்ட் கோர்ட்டில் விசாரிக்கப்பட வேண்டும் என்றும், அப்பீல் செலவுகள் மேற்படி மனுதாருக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. நீதியரசர் டயஸும் இத்தீர்ப்பை ஆமோதித்தார்.

நமது ஜோஸியப் பகுதி:

இலங்கையின் மந்திரி சபை

[சுகன்யா எழுதுவது]

இலங்கையின் முதல் மந்திரி சபை சர்வஜித்து வரு புரட்டாசி மீ 10-ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணியில் (கிறிஸ்தவ 1947ம் ஆண்டுசெப்டம்பர் மீ 26-ம் தேதி) ஜெனனமானது. ஜெனனமான லக்னம் கும்பம், நக்ஷத்திரம் அவிட்டம்.

மந்திரி சபையின் ஜாதகம் பின்வருமாறு:-லக்னம், கும்பம் சுகஸ்தானத்தில் ராகு சத்துரு ரோகஸ்தானத்தில் லக்னாதிபன் சனியும், கருமஸ்தானாதிபன் செவ்வாயும், ஆயுள் ஸ்தானத்தில் சூரியன், புதன், சுக்கிரனும், தொழில் ஸதானத்தில் வியாழன் கேதுவும், விரய ஸ்தானத்தில் சந்திரனும்.

ஜனநாயகததை ஆதரிக்கும் கிரகமாகிய செவ்வாய் பகவான் தொழில் ஸதானாதிபதியாய் சத்துருரோக ஸதானத்தில் நீசமபெற்றும், பொதுவுடமைக் கட்சியை அதாவது இடதுசாரிக் கட்சியை ஆதரிக்கும கிரகமாகிய சனிபகவானுடன் சேர்ந்துமிருப்பதாலும் ஜெனன தேசா செவ்வாயாதலாலும் சேனாநாயகாவின் மந்திரி சபை படாத பாடுபடுமெனக் கிரகங்கள் காட்டுகின்றன. பாராளுமன்ற வலது சாரி இடதுசாரிக் கட்சிகளின் போர்த்தளமாகும் போல் தோன்றுகிறது. தொழில் ஸதானத்தில் வியாழனும் கேதுவும் பின்னப்பட்டிருபபதால் இந்த மந்திரி சபை பேச்சளவில் அல்லாமல் செய்கையளவில் ஒன்றும் செய்யும்போல் தோன்றவில்லை. திருசேனாநாயகாவுக்கு ஞானம்பேசும் திறமையை ஞானகாரகன் கேது செய்யக்கூடும். இந்த மந்திரி சபைக்கு எதிர்ப்பு வரவரக் கூடும்.

ஆயுள் ஸதானத்தில் நீசம் பெறற சுக்கிரனுடன் புதனும் மாரக ஸதானாதிபன் சூரியனுமிருப்பதால் இந்த மந்திரி சபைக்கு அரிட்ட பீடையுண்டாம். ஆறு மாதத்தில் ஓர் குழப்பமும், இரண்டாம் வருஷததில் இன்னொரு குழப்பமு மூண்டாகக் கூடும்.

இந்த வாரத் திளப் பலன்

ஞாயிறு:-அக்டோபர் 5-இன்று கொண்டாட்டங்களுக்கும் பொதுக் கருமங்கள் ஆரம்பிப்பதற்கும் பொது நாள்.

சந்திர லக்னம்:-இடபம், கடகம், சிங்கம், விருச்சிகம், தனுசு, மீனராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் முன்னேற்றங்களுண்டாம்.

திங்கள் அக்டோபர் 6-இன்று வீடுவேய்தல், ஓலைவெட்டல் வியாபாரம் செய்தல், புதுக்கணக்குப் பதிதல், மரவகை செடிவகை நடுதல் முதலியவற்றிற்கு விசேஷதினம்.

சந்திரலக்னம். மேடம், மிதுனம், சிங்கம், கன்னி, தனுசு, மகரராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் விசேஷ பலனுண்டாம்.

செவ்வாய். அக்டோபர் 7 அஷ்டமி, இன்று புது கருமங்கள் ஆரம்பிப்பதற்கு தோஷநாள்.

சந்திரலக்னம், மேடம், மிதுனம், சிங்கம், கன்னி, தனுசு மகரராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் நற்பலனுண்டாம்.

புதன். அக்டோபர் 8. நவமி இன்று தோஷதினமாதலால் புது கருமங்கள் ஆரம்பிப்பது நலமல்ல.

சந்திரலக்னம், இடபம், கடகம், கன்னி, துலாம், மகரம். கும்பராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் கீர்த்தியுண்டாம்

வியாழன். அக்டோபர் 9 இன்று கிணறு குளம் தோண்டல், கடை கட்டல், ஓலை வெட்டல் வீடுவேய்தல், பிரயாணம் செய்தல், புதுக்கணக்குப் பதிதல் முதலியவற்றிற்கு சுபதினம்.

சந்திரலக்னம். இடபம் கடகம், கன்னி, துலாம், மகரம், கும்பராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தனத்தில் வெற்றியுண்டாம்.

வெள்ளி. அக்டோபர் 10 மரணபோகம். இன்று எல்லாக் கருமங்களுக்கும் தோஷதினம்.

சந்திரலக்னம், மிதுனம், சிங்கம், துலாம், விருச்சிகம், கும்பம் மீனராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் பணலாபமுண்டாம்.

சனி. அக்டோபர் 11 இன்று பொதுக் கருமங்கள் செய்வதற்கு பொதுநாள்.

சந்திரலக்னம். மிதுனம், சிங்கம், துலாம். விருச்சிகம், கும்பம், மீனராசிகளில பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் சுகமுண்டாம்.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம் ஆண்டு அக்டோபர் மீ 5உ இந்த பத்திரிகை 194 A. தட்டாரத் தெரு, கொழும்பு. சுதந்திரன் அச்சுக் கந்தோரில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்ட்ரீட்டில் இருக்கும் சிங்கராம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org